# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

# ஆண்டறிக்கை

# 2012

# உள்ளடக்கம்


| | | பக்க இல. |
|---|---|---|
| | செயலாளரின் செய்தி | 01 |
| | பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 02 |
| | உள்ளடக்கம் | |
| | அட்டவணைகளின் பட்டியல் | |
| | உருக்களின் பட்டியல் | |
| | முதலெழுத்துக்களும் சுருக்கங்களும் | |
| **1** | **அறிமுகம்** | 03 |
| 1.1 | தற்போதைய நிலைமை | 04 |
| 1.2 | அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய மன்றம் | 04 |
| **2** | **அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சுருக்கக் குறிப்பு** | 06 |
| 2.1 | நோக்கு,செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் | 07 |
| 2.2 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழிற்பாடுகள் | 07 |
| 2.3 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்குக் கட்டமைப்பு | 08 |
| 2.4 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பும் பணியாட்தொகுதியின் பதவிநிலையும் | 09 |
| | 2.4.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பை மீளமைத்தல் | 09 |
| | 2.4.2 பதவியணி ஆட்சேர்ப்பு | 09 |
| | 2.4.3 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கமைப்பு அலகுகள் (DDMCUs) | 11 |
| 2.5 | 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற சந்தர்ப்பங்களும் இடையூறுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வுகளும | 12 |
| | 2.5.1 சந்தர்ப்பங்கள் | 12 |
| | 2.5.2 இடையூறுகள | 12 |
| | 2.5.3 சிபாரிசுகள் | 15 |

**3 தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள் 16**

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் மீளாய்வு 16

3.2 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கை 16

3.3 தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் (NDMP) 16

3.4 தேசிய அவசரகால செயற்பாட்டுத் திட்டம் (NEOP) 16

3.5 கூட்டிணைந்த திட்டம் 16

3.6 இடைக்கால முகாமைத்துவக் குழு 17

3.7 கணக்காய்வு, முகாமைத்துவக் குழு 17

3.8 "தேசத்துக்கு மகுடம்" தேசிய கண்காட்சி - 2013 18

3.9 2012 – தேசிய பாதுகாப்பு தினம் 19

3.10 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கமைப்புக் குழு (NDMCC) 20

**4 தணித்தல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவு**

4.1 *அறிமுகம்* 21

4.2 2013ஆம் ஆண்டில் தணித்தல் கருத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 21

I. மாவட்டங்களில் அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் 22

II. பாணதுறை, களுத்துறை மாவட்டங்களில் வெள்ள தணிப்பு 24

III. கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் மலைச்சரிவுகள் ஏற்படும் பிரதேசங்களில் / மற்றும் மண்சரிவுகள் அதிகமான பகுதிகளில் அனர்த்த பாதிப்புக்களை குறைக்கும் வகையில் தடுப்பு சுவர்களை நிர்மாணிதத்ல் 24

IV. யாழ் குடாநாட்டில் வெள்ள தணிப்பு 25

V. தம்புள்ளை நகரில் வெள்ள தணிப்பு 26

| | | |
|---|---|---|
| VI. | நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் மலைச்சரிவுகள் ஏற்படும் பிரதேசங்களிலும் மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்களிலும் பாதிப்புக்களை குறைப்பதற்காக தற்காலிக தடுப்பு சுவர்களை அமைத்து பலப்படுத்துதல். | 26 |
| 4.3 | தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் ஏனைய செயற்பாடுகள | 27 |
| 4.3.1 | தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் செயற்பாடுகள் (TAC) | 27 |
| 4.3.2 | அனர்த்த பக்கவெட்டுக்களை அபிவிருத்தி செய்தல் கருத்திட்டம் | 28 |
| 4.3.3 | ஒருங்கிணைந்த மூலோபாயங்களினூடாக சூழல் மதிப்பீடுகளை மேற்கொள்ள அபிவிருத்தி செய்தல் (ISEA) | 29 |
| 4.3.4 | ஜியோநோட் தரவுகள் பறிமாறல் புகுவழியை ஏற்படுத்தல | 29 |
| 4.3.5 | அனர்த்த தாக்கங்களை மதிப்பிடுதலுக்கான கட்டமைப்பினை ஏற்படுத்தல | 30 |
| 4.3.6 | இலங்கையில் அபிவிருத்தியை திட்டமிடும்போது அனர்த்த பாதிப்புக்களை குறைப்பதற்கான பிரதான நீரோட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பங்களிப்புடனான அபிவிருத்தி கருத்திட்டம் (PIP) - கட்டம் 3 | 30 |
| 4.3.7 | தேசிய மட்டத்தில் அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்கான கருத்திட்ட நுழைவாயிலை அபிவிருத்தி செய்தல் | 32 |
| 4.3.8 | வேறு சர்வதேச ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 32 |
| 4.3.9 | டிஸ்.ஸ்வென்டர் **(DesInventar)** தரவு கட்டமைப்பு | 33 |
| 4.3.10 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தரவுகள் களஞ்சியம் | 33 |

5 முன்னாயத்த திட்டமிடல் பிரிவின் பணிப்பாளரின் அறிக்கை 34

5.1 அறிமுகம் 34

5.2 பல்வேறு மட்டங்களில் அனர்த்த முன்னாயத்தங்கள் அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் (DPERPs) 34

5.2.1 மாவட்ட DPERPs அபிவிருத்தி செய்தல் 34

5.2.2 பிரதேச DPERPs களை அபிவிருத்தி செய்தல் 34

5.2.3 கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் (GN) முன்னாயத்த திட்டமிடல் அபிவிருத்தி 37

5.3 கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் ஒத்திகைகளை நடத்துதல் 37

5.4 ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பாரிய தடுப்புச் சுவர்கள் தொடர்பாக முன்னாயத்த செயற்பாடுகள் 38

5.5 பாடசாலைக்கு வழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் பாடசாலை சுனாமி அப்புறப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் 39

5.6 பிரதேச பிரிவு அடிப்படையில் குழுக்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விசேட அறிவூட்டல் 41

5.7 டிபெகோ (DiPECO) கருத்திட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் திட்டம் 42

| | | |
|---|---|---|
| **6** | **சமூகத்தை விழிப்புணர்வூட்டும் பிரிவின் பணிப்பாளர் அறிக்கை** | **43** |
| 6.1 | அறிமுகம் | **43** |
| 6.2 | மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் | 43 |
| | 6.2.1 பிரதேச அதிகார சபைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (LA) | 43 |
| | 6.2.2 பங்காளி தரப்பினரின் ஆற்றல்விருத்தி | 43 |
| | 6.2.3 இடம்பெயர் பயிற்சி வாகனம் மூலம் மக்களுக்கு அறிவூட்டல் | 44 |
| | 6.2.4 இடிமின்னல், மண்சரிவு, நில அதிர்வுகளினால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டல் | 44 |
| | 6.2.5 பாடசாலை அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுக்களை ஏற்படுத்தல் | 45 |
| | 6.2.6 தேசிய அபிவிருத்தி திட்டத்தில் அனர்த்த குறைப்பு கட்டமைப்பினையும் உள்வாங்குதல். | 46 |
| 6.3 | மாவட்ட அனர்த்த முகாமைத்துவக்குழு அங்கத்தவர்களின் ஆற்றலை விருத்தி செய்தல் | 46 |
| 6.4 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணியினர் மற்றும் பங்காளி பிரதிநிதிகளின் ஆற்றல் அபிவிருத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 47 |
| 6.5 | அச்சிடும் உபகரணங்கள் | 48 |
| 6.6 | ஊடக செயலமர்வுகளும் ஊடக சந்திப்புக்களும் | 48 |
| 6.7 | பயிற்சியளிப்பதற்கான உபகரணங்களை அபிவிருத்தி செய்தல் | 49 |

**7 உடனடி கருமமாற்றல் பிரிவின் பணிப்பாளரின் அறிக்கை** 49

7.1 அறிமுகம் 49

7.2 பாரிய அனர்த்தங்களுக்கான அவசர பதிலீட்டு நடவடிக்கைகள் 51

7.2.1 வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர் 51

7.2.2 பலமான/உக்கிர காற்று 51

7.2.3 காட்டு/நகர்புற தீயிற்கான அவசர பதிலீட்டு நடவடிக்கைகள் 52

7.2.4 இடிமின்னல் 53

7.2.5 வறட்சி 53

7.3 அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல்களை பகிர்ந்தளித்தல் 54

7.4 வெளியெற்றுவதற்கு இராணுவத்தினரின் உதவிகளைப்பெறுதல 55

7.5 உள்ளக அரச நிறுவன கட்டமைப்பு (IGN) 56

7.6 தேசிய சுனாமி வெளியேற்றல் ஒத்திகை 57

7.7 வேறு செயற்பாடுகள் - வெளியெற்றுவதற்கான பயிற்சி ஒத்திகைகள் முன்னேற்றம் 58

7.7.1 இலங்கையின் அனர்த்த வள கட்டமைப்பு (SLDRN) 58

7.7.2 அழைப்பு நிலையம் 59

7.7.3 தொற்றுநோய்களின்போது அதற்கான செயற்பாடுகளை தொடர்ச்சியாக திட்டமிடல் 59

7.7.4 அனர்த்த முகாமைத்துவ அறிவூட்டல் குறிகாட்டி - 2013 60

7.7.5 சகல அனர்த்த முன்னெச்சரிக்கை கோபுரங்களுக்கும் வி.எச்.எப். தொழில்நுட்பத்தின் ஊடாக அறிவித்தல்களை வழங்குதல் 60

7.7.6 அவசர பதில் நடவடிக்கைகளுக்கான குழுக்கள் 60

7.7.7 சுனாமி வெளியேற்றல் முன்னெச்சரிக்கை மாதிரிகளை கற்பிப்பதற்கான செயலமர்வுகளை நடத்துதல 61

17.7.8 தேசிய அவசர கருமமாற்றல் திட்டம் (NEOP) 61

7.7.9 ஊடக ஆலோசனைகள் 63

7.7.10 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி 64

7.7.11 மேல்மாகாணத்தில் சம்பவங்கள் தொடர்பான கட்டளையிடும் கட்டமைப்பு (ICS) தொடாபான பயிற்சியளிப்பு 64

7.7.12 டெங்கு தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் 65

7.7.13 மாவட்ட அனர்த்த முகாமைத்தவக் குழு உறுப்பினர்களின் துரித பதில் நடவடிக்கைகளுக்கான ஒருங்கிணைப்பு ஆற்றலை மேம்படுத்தல் 66

8 இறுதிக் கணக்குகள் 2012 - அனர்த்த முகாமைத்துவ நிலையம் 67

9 கணக்காய்வு அறிக்கை 92

10 கணக்காய்வு அறிக்கை பற்றிய அவதானங்கள் 102

## அட்டவணைகளின் பட்டியல்


| அட்டவணை இல. | அட்டவணைத் தலைப்பு | பக்க இல. |
|---|---|---|
| அட்டவணை 2-1: | 2013ஆம் ஆண்டில் நிரப்பப்பட்ட பணி வெற்றிடங்கள் | 08 |
| அட்டவணை 2-2: | 20-09-2013ஆம் திகதியில் உள்ளவாறான அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாட்றொகுதி நிலைமை | 10 |
| அட்டவணை 4-1: | 2013ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்ட தணிப்பு கருத்திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் | 21 |
| அட்டவணை 4-2: | நடவடிக்கைகள் தாபிக்கப்பட்டுள்ள மாவட்டங்களும் அனர்த்தங்களும் மற்றும் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளும் | 23 |
| அட்டவணை 4-3: | 31-08-2013ஆம் திகதியில் உள்ளவாறான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் | 25 |
| அட்டவணை 5.1 | தேசிய மட்ட நிகழ்ச்சிகளின் விபரங்கள் | 35 |
| அட்டவணை 5-2: | மாவட்டங்களில் தகைமை கட்டியெழுப்புதல் நிகழ்ச்சிகள் | 36 |
| அட்டவணை 5-3: | உள்ளூராட்சி அதிகாரசபை உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளின் விபரங்கள் | 37 |
| அட்டவணை 5-4: | 19 மாவட்டங்களில் பாடசாலை ஆசிரியர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகள் | 39 |
| அட்டவணை 5-5: | அரசாங்க மருத்துவ அதிகாரிகளுக்கும் முதலுதவி குழு உறுப்பினர்களுக்கும் நடத்தப்படும் நிகழ்ச்சி | 40 |
| அட்டவணை 5-6: | இளைஞர் தொண்டர் குழுக்களுக்கான நிகழ்ச்சிகள் | 42 |
| அட்டவணை 6-1: | மாவட்ட DPERPகளை தயாரிப்பதற்கான ஆரம்ப மற்றும் இறுதி செயலமர்வுகள் | 44 |
| அட்டவணை 6-2: | மேற்கொள்ளப்பட்ட உடற் செயற்பாடுகளின் மாவட்ட ரீதியிலான சுருக்கக் குறிப்பு | 45 |
| அட்டவணை 6-3: | மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் அணை பாதுகாப்பு நிகழ்ச்சிகளின் சுருக்கக் குறிப்பு | 47 |
| அட்டவணை 7-1: | 2013 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் ஏற்பட்ட சேதங்களும் இழப்புகளும் | 53 |

## உருக்களின் பட்டியல்


| உருக்களின் இல. | உரு தலைப்பு | பக்க இல. |
|---|---|---|
| உரு 1-1 | தேசிய மன்றத்தின் உள்ளடக்கம் | 05 |
| உரு 2-1 | அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைவு | 08 |
| உரு 2-2 | மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு முறைமை | 10 |
| உரு 4-1 | அனர்த்த தணிப்பு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | 21 |
| உரு 7.1 | 31 ஜனவரி 2013 முதல் 31 ஆகஸ்ட் 2013 வரை அனர்த்தங்களினால் ஏற்பட்ட சேதங்களும் இழப்புகளும் | 53 |

# செயலாளரின் செய்தி

2012ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வருடாந்த அறிக்கையின் பொருட்டு அமைச்சின் செயலாளர் மற்றும் இடைக்கால முகாமைத்துவக் குழுவின் தலைவர் என்ற வகையில் முகவுரை ஒன்றை வழங்க முடிந்தமை தொடர்பாக மகிழ்ச்சி அடைகின்றேன்.

நிலைபேறு அபிவிருத்திக்காக அனர்த்த அபாயங்களை குறைப்பதன் மூலம் இலங்கை மக்களுக்கு சுபீட்சமான பெருமைமிகு வாழ்க்கையொன்றை பெற்றுக்கொடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகளின் பொதுவான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசுகளின் கீழ் மற்றும் அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டலின் ஏற்பாடுகளுக்கமைய இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் மற்றும் கௌரவ அமைச்சரவையின் அனுமதிக்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதி நிர்வாகம் மேற்பார்வை மற்றும் வழிநடத்தலுக்காக இடைக்கால முகாமைத்துவக் குழுவினை நியமித்தல் 2012இல் மேற்கொள்ளப்பட்ட மிகவும் விசேடமான நடவடிக்கைகளாகும்.

அனர்த்த முன் ஆயத்தமாக அவசியமான அனர்த்த விபரங்களை தயாரிப்பதற்கு தேவைப்படும் அனர்த்த விபரக்கோவையை 2012 தேசிய அனர்த்த பாதுகாப்பு தினத்தில் வெளியிட முடிந்தமை அனர்த்த முகாமைத்துவ நிலையம் பெற்றுக்கொண்ட பாரிய வெற்றியாகும்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கிய பிரிவுகளாக ஊடகங்களுக்கு விளக்கமளித்தல் தொடர்பாடலை விருத்தி செய்வதற்கான முறையினை மேம்படுத்தல், தொடர்பாடல் உபகரணங்களை வழங்குதல் என்பன அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பெரும் பணிகளாகும்.

இந்த வெற்றிகள் மற்றும் இலக்குகளை அடைதல் அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியணியினரின் அர்ப்பணிப்பில் சிறந்த பெறுபேறாகும் என்பதனால் இதற்காக தமது பங்களிப்பினை வழங்கிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் உட்பட பதவியணியினருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இடைக்கால முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் அமைச்சின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தேசிய அனர்த்த முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு பங்காளிகளுக்கும் இந்த பணிகளை வெற்றிபெருவதற்காக வழங்கிய பங்களிப்புக்களுக்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் தொடர்ந்தும் இந்த ஒத்துழைப்பு கிடைக்குமெனவும் எதிாபார்க்கின்றேன்.

எஸ்.எம். மொஹமட்
செயலாளர்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

''அறிந்து கொள்வோம் - அனர்த்தங்களை களைவோம்'' என்ற தொனிப்பொருளில் 2012ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒட்டுமொத்தமான நாட்டையே உள்ளடக்கி அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கான பல விசேட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது.

அனர்த்த முன் ஆயத்தம், பதில் நடவடிக்கைகள், அனர்த்த தணிப்புக்கான நடவடிக்கைகளை திட்டமிடல் என்பவற்றுக்கு அடிப்படையான அனர்த்தங்கள் தொடர்பான விபரக்கோவையை தயாரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையான அனர்த்த விபரக்கோவை 2012 டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி தேசிய அனர்த்த பாதுகாப்பு தினத்தில் வெளியிடப்பட்டது. அதேபோன்று தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டத்துக்காக தேசிய சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடிந்தமையும் விசேட விடயமாகும்.

இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்துக்கமைய நிறுவப்பட்ட இடர் முகாமைத்துவம் தொடர்பான தேசிய சபையின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்கமைய நிறுவப்பட்ட இடைக்கால அனர்த்த முகாமைத்துவக் குழுவினதும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினதும் வழிகாட்டலின் கீழ் 2012இல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றிக்கொள்ள பெரிதும் ஏதுவானதாக குறிப்பிட வேண்டும்.

2012 ஏப்ரல் மாதம் 12ஆந் திகதி வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுனாமி முன்னெச்சரிக்கை அறிவித்தலுக்கமைய கரையோரப்பகுதிகளில் வாழும் அபாயத்தை எதிர்நோக்கும் மக்களை 100% அப்புறப்படுத்த முடிந்ததன் மூலம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறுவப்பட்டுள்ள சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்தின் செயலாற்றுத் திறமையினை வெளிப்படுத்துவதுடன் இவ்வாறான அனர்த்தமொன்றினை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலையும் சிறப்பாக உறுதிப்படுத்துகின்றது.

இதற்கு மேலாக 2012ஆம் ஆண்டு வறட்சி, வெள்ளம் மற்றும் சூறாவளி போன்ற அனர்த்தங்களை மிகவும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்ததையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த நிலையத்தின் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக கௌரவ அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் கௌரவ அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் அமைச்சு செயலாளர் இடைக்கால முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் உட்பட அமைச்சின் அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பினை நன்றியுடன் நினைவுகூறுகின்றேன்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையினக் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உட்பட சர்வதேச தரப்பினர் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு நாடளாவிய ரீதியிலுள்ள பதவியணியினரின் அர்ப்பணிப்பு என்பவற்றின் ஊடாக பயனுள்ள மற்றும் பெபேறுமிக்க இலக்கை அடைவதற்கான முயற்சியில் 2012ஆம் ஆண்டில் பெற்ற வெற்றியானது எதிர்கால நடவடிக்கைகளுக்கு பெரிதும் உறுதுணையாக அமையும்.

மேஜர் ஜெனரல் காமினி ஹெட்ஆரச்சி (இளைப்பாறிய)
பணிப்பாளர் நாயகம்

# அனர்த்த முகாமைத்துவ நிலையம்

## வருடாந்த அறிக்கை 2012

### 1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பிரதான நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையமாகும் (அ.மு.நி). குறிப்பிட்ட சகல பங்காளிகளையும் இணைத்துக் கொண்டு இடர் ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்காக தேசிய மற்றும் உபதேசிய மட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகிய தொடர்பு அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை இடர் தேசிய சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் எனும் நோக்குடன் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவை (தே.அ.மு.பே) நிறுவப்பட்டது. தேசிய கொள்கை வகுத்தல் மற்றும் மூலோபாய பணிப்புரை வழங்குவதற்கான ஆணை தேசிய சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை நிர்வாகம் செய்வதும் வழிகாட்டுவதும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பணியாகவுள்ளது.

பதிலிறுப்புசார் பொறிமுறையொன்றிலிருந்து விலகி செயற்பாட்டிற்கு ஆதரவான ஓர் அணுகுமுறை தொடர்பான கொள்கை மாற்றத்திற்கு இட்டுச் சென்ற ஒட்டுமொத்த அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அனர்த்த அபாயக்குறைப்பு முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் ஓர் வேலைச் சட்டகமாக 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டம் உருவாகியுள்ளது. இச்சட்டத்தின் ஆளுகைக்குள் இருபத்தொரு (21) அபாயங்கள் வந்துள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் (அ.மு.நி.) தலைமை பணியாக விளங்குவது யாதெனில் இடர்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்தல் அதற்கு தயார்படுத்தல், ஆபத்துக்கு முகங்கொடுக்கக்கூடிய சமூகத்தினருக்கு அதனை முன்கூட்டியே அறிவித்தல். அவசர சந்தர்ப்பங்களில் சிகிச்சையளித்தல், நிவாரண உதவி சேவைகள் என்பவற்றை ஒருங்கிணைத்தல் மற்றும் ஏனைய பிரதான நிறுவனங்களுடன் இணைந்து இடர்கள் முடிந்தவுடன் செயற்பாடுகளில் பங்குகொள்ளுதல் என்பனவாகும். இடர் ஆபத்துக்களை குறைக்கும் நோக்குடன் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு நிலையங்கள் பிரதேச மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன.

## 1.1 தற்போதைய நிலைமை

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கிவரும் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது ஆறரை (6½) வருடங்களின் பின்னர் அனர்த்தம் தொடர்பான சகல செயற்பாடுகளிலும் பிரதான வகிபாத்திரத்தை வகிக்கக்கூடிய ஓர் தேசிய நிலையமாக உருவாகிவருகின்றது. அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் அவற்றிற்கு அனுசரணை வழங்கவும் மற்றும் நிறைவேற்றவும் மாவட்ட பிரதேச சபை மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் நாடு தழுவிய அளவில் தாபிக்கப்பட்டன. 2011ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் இக்குழுக்களை தாபிப்பதில் விசேட அக்கறை காண்பிக்கப்பட்டது.

வெள்ளம், மண்சரிவு, சூறாவளி, சுனாமி மற்றும் ஏனைய ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் அனர்த்த முன் ஆயத்த செயற்பாடுகளையும் அவசர பதிலிறுப்பு செயற்பாடுகளையும் ஸ்திரப்படுத்தல் தொடர்பாக கிராம சேவகர் மட்டத்தில் பல சமூகமட்ட தன்னார்வ குழுக்கள் 2006 ஆண்டிலிருந்து தாபிக்கப்பட்டன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரச சாரா முகவர்களின் ஒத்துழைப்புடன் அனைத்து பிராந்திய மட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவையாளர் மட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணிக்கவும் நிறைவேற்றவும் உதவிபுரிகின்றன.

## 1.2 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய சபை

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்துக்கமைய தேசிய சபை (NCDM) 2005ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான முன்னணி நிறுவனம் இதுவாகும் என்பதுடன் இந்த தேசிய சபை அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் மற்றும் பிரதமரின் துணைத் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுகின்றது. சட்டத்தினால் விசேடமாக உணர்த்துவிக்கப்பட்டுள்ள சகல அமைச்சுக்களின் அமைச்சர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் மாகாண முதலமைச்சர்கள் (ஏதேனுமோர் மாகாணத்துக்கு முதலமைச்சர் ஒருவர் தெரிவு செய்யப்படாத பட்சத்தில் அந்த மாகாணத்துக்காக தெரிவு செய்யப்பட்ட ஆளுநர்) உட்பட எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 5 பேர் இந்த தேசிய சபையில் அடங்குகின்றனர்

அட்டவணை. 1-1: தேசிய சபையின் ஒழுங்கமைப்பு

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் ஒழுங்கமைப்பு




**அட்டவணை 1**

2012 மே மாதம் 11ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் கூடியதுடன் இங்கு விசேடமாக நாட்டின் அபிவிருத்தியைத் திட்டமிடல், மண்சரிவுகள், வெள்ளப்பெருக்கு ஆபத்து அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப் பட்டது. அதன்போது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் பின்வரும் அனர்த்தங்கள் அனர்த்த முகாமைத்துவத்தின் கண்காணிப்பில் வருகின்றன.

1. மண்சரிவு
2. சூறாவளி
3. வெள்ளம்
4. வரட்சி

5. கைத்தொழில் ஆபத்துக்கள்
6. சுனாமி (அலைகள்)
7. பூமியதிர்ச்சி
8. வளிமண்டல ஆபத்துக்கள்
9. கரையோர ஆபத்துக்கள்
10. தீ
11. தொற்று நோய்கள்
12. வெடிப்புகள்
13. விமான தாக்குதல்கள்
14. சிவில் அல்லது உள்ளக வன்முறைகள்
15. இரசாயன விபத்துக்கள்
16. கதிர்வீச்சினால் ஏற்படும் விபத்துக்கள்
17. உள்நாட்டு அல்லது கப்பல் எண்ணெய் ஒழுக்குகள்
18. அணு ஆபத்துக்கள்
19. நகர மற்றும் காட்டுத்தீ
20. கடற்கரை மண்ணரிப்பு
21. புயல், இடி மின்னலுடன் கூடிய புயல்

## 2. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஓர் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையிலும் ஐந்து பணிப்பாளர்களின் கீழ்வரும் ஐந்து பிரிவுகளையும் உள்ளடக்கி தாபிக்கப்பட்டது. இவ் ஐந்து பிரிவுகளாவன, தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அவசர நடவடிக்கை மற்றும் முன்னெச்சரிக்கை விடுத்தல், முன் ஆயத்த திட்டமிடல், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, நிர்வாகம் மற்றும் நிதி என்பனவாகும். மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட மட்டங்களில் காணப்படுகின்றன (மா.அ.ஒ.அ) உதவிப் பணிப்பாளர்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் உதவியுடன் மா.அ.ஒ.அ.களுக்கு பொறுப்பாகவுள்ளனர்.

## 2.1 நோக்கு, பணி, குறிக்கோள்கள்

### நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமூகமொன்றை கட்டியெழுப்புவதன் மூலம் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தல்

### செயற்பணி

இயற்கையான தொழில்நுட்ப மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அனர்த்த ஆபத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மூலம் சமூகத்திற்குள்ளும் தேசத்திற் குள்ளும் பாதுகாப்பு தொடர்பான எண்ணக்கருவை ஏற்படுத்தல்.

### குறிக்கோள்கள்

அமைச்சு, திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் போன்ற நாடளாவிய ரீதியிலான நிர்வாக அலகுகள் ஊடாக பின்வரும் விடயங்களை ஒருங்கிணைத்தலும் நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும்.

## 2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கடமைப்பொறுப்புகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பின்வரும் கடமைப்பொறுப்புகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

- தேசிய கொள்கைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமிடல் மற்றும் தேசிய அவசரகால கருமமாற்றலுக்கான திட்டங்களை தயாரித்தல்.
- அனர்த்த ஆபத்துள்ள வலயங்களை வரைபடத்தில் தயாரித்தல் மற்றும் ஆபத்துக்களை மதிப்பீடு செய்தல்.
- பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் ஒருங்கிணைத்தலும்.
- அரச நிறுவனங்களில் அனர்த்த பதில் நடவடிக்கைகள் தொடர்பாக முன்னாயத்தப் படுத்தலும் முன்னாயத்தப்படுத்தல்களை திட்டமிடுதலும் மேம்படுத்த உதவுதலும்
- முன் எச்சரிக்கைகளை வழங்குதல்
- அவசர பதில் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தலும் தேடுதல் மற்றும் மீட்பு பணிகளை ஒருங்கிணைத்தலும்

- நிவாரண சேவைகள் உட்பட அனர்த்தத்தின் பின்னரான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- அனர்த்த ஆபத்துக்களை குறைத்தல்
- பரிசீலனைகளும் அபிவிருத்தியும்
- அனர்த்த ஆபத்துக்களை குறைத்தலை அபிவிருத்தியின் பிரதான நீரோட்டத்தில் இணைத்தல்
- காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடைவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்காக அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், முகவர் நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள் சர்வதேச தன்னார்வ அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

  அனர்த்த ஆபத்துக்களை குறைத்தல், பதில் நடவடிக்கைகள், வறுமை நிலைக்கு வருதல், வெளிநாட்டு உதவிகளைப்பெறும் கருத்திட்டங்களை ஆரம்பித்தலும் ஒருங்கிணைத்தலும்.

## 2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் பல்வேறு விடயங்களை கருத்திற் கொண்டு அதன் ஒழுங்கமைப்பு பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

**உதா. 2-1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பு**



## 2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பான பார்வை

### 2.4.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஒழுங்கமைப்பினை மறுசீரமைத்தல்.

அனர்த்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் சேர்த்துக் கொள்ளும் பணிகள் முடிவடைந்து 2011 மே மாதம் மீள் ஒழங்கமைத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊழியர்கள் வெற்றிடங்களை நிரப்பும்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பின்வரும் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அந்த பிரிவுகளாவன அனர்த்தங்களை குறைத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு, அவசர பதில் நடவடிக்கைகள் மற்றும் முன்னெச்சரிக்கை பிரிவு மக்களுக்கு அறிவூட்டும் பிரிவு முன் ஆயத்த திட்டமிடல் பிரிவு மற்றும் நிதிப்பிரிவு என்பவையாகும்.

### 2.4.2 அளணியினரை சேர்த்தல்

ஆளணியினரை சேர்த்துக்கொள்ளல் அரச முகாமைத்துவத் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு முறைக்கமைய இடம்பெற்றுள்ளதுடன் வருட இறுதியாகும் போது பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்களில் 75% ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அட்டவணை 2-1: 2012இல் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களின் விபரங்கள் பின்வருமாறு**.**

**அட்டவணை 2-1:** 2012ஆம் ஆண்டில் நிரப்பப்பட்ட வெற்றிடங்கள்

| பதவி | மொத்தம் |
|---|---|
| நூலகர் | 01 |
| உதவிப்பணிப்பாளர் (அறிவூட்டல்) | 01 |
| உதவிப்பணிப்பாளர் (தொடர்பாடல்) | 01 |
| உதவிப்பணிப்பாளர் (நிதி) | 01 |
| உதவிப்பணிப்பாளர் (மாவட்டம்) | 04 |
| அனர்த்த முகாமைத்துவ உதவியாளர் | 17 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 06 |
| சாரதி | 11 |

2012 டிசெம்பர் 31ஆந் திகதியன்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியணியில் ஊழியர் பதவிகள் ஒழுங்கமைப்பு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

**அட்டவணை 2-2** ஊழியர் பதவிகள் ஒழுங்கமைப்பு தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| பதவி | அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் | 1 | 0 | 1 |
| பணிப்பாளர் | 5 | 2 | 3 |
| உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| பிரதிப்பணிப்பாளர்கள் | 7 | 0 | 7 |
| உதவிப்பணிப்பாளர்கள் (ஊடகம்) | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர்கள் (මානව සම්පත්) | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர்கள் (நிதி) | 1 | 1 | 0 |
| உதவிப்பணிப்பாளர் | 12 | 12 | 0 |
| உதவிப்பணிப்பாளர்கள் (மாவட்டம்) | 25 | 19 | 6 |
| நிதி உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| நூலகர் | 1 | 0 | 1 |
| அபிவிருத்தி உதவியாளர் | 1 | 0 | 1 |
| மொழிபெயர்ப்பாளர் | 1 | 0 | 1 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 2 | 2 | 0 |
| அந்தரங்க உதவியாளர் | 1 | 0 | 1 |
| வீடியோ, புகைப்பட நுட்பவியலாளர்கள் | 1 | 0 | 1 |
| தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர்கள் | 3 | 0 | 3 |
| வானொலி செயற்பாட்டாளர்கள் | 1 | 0 | 1 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 46 | 18 | 28 |
| அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள் | 100 | 85 | 15 |
| சாரதிகள் | 35 | 35 | 0 |
| அலுவலக சிற்றூழியர்கள் | 5 | 5 | 0 |
| **மொத்தம்** | **254** | **185** | **69** |

### 2.4.3 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகு (DDMCU)

இந்த அலகுகளின் பதவியணிகள் உதவிப்பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகிய உத்தியோகத்தர்களைக் கொண்டிருக்கும். மாவட்டம் அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய சாத்தியத் தன்மைக்கமைய ஏதேனும் மாவட்டத்துக்கு தேவையான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது தங்கியுள்ளது. 25 மாவட்டங்களிலும் உள்ள அனைத்து மாவட்ட அலகுகளில் உள்ள பதவியணியில் உதவிப்பணிப்பாளர்கள் (மாவட்டம்) 25 பேரும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் 85 பேரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்

இராணுவம், மற்றும் விமானப்படையைச் சேர்ந்த 97பேர் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பபு அலகுகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மற்றும் களுத்துறை தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன.

**வரைபடம் 2-2.**

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ வழிமுறை



## 2.5 2012ஆம் ஆண்டு இடம்பெற்ற சந்தர்ப்பங்களும் இடையூறுகள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வுகளும்

### 2.5.1 சந்தர்ப்பங்கள்

1) அனர்த்தங்கள் அதிகரிக்கும் நிலைமைகளினால் சமூகத்தினரையும் கொள்கை வகுப்பாளர்களையும் சந்திக்க வேண்டி இருந்ததனால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் அனர்த்தங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது.

2) உள்நாட்டு மற்றும் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்குள்ள வரவேற்பு காரணமாக எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்ட பணிகள் மிகவும் சிறப்பாக முன்னெடுக்க முடிந்தமை.

3) நிகழ்காலத்தில் உள்ள தொழில்நுட்பத்துடன் அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்தங்களை குறைத்து கொள்வது தொடர்பான திட்டங்களை நடைமுறைப் படுத்தலை வெற்றிகரமாக மேற்கொள்ள வாய்ப்புக்கிடைத்தது.

4) அனர்த்தம் ஏற்படக்கூடிய பிரதேசங்களை வரைபடத்தில் உள்ளடக்கல், பலதரப்பட்ட மாவட்டங்களிலான முன்னாயத்தம், பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் வழிகாட்டல் மற்றும் கருமமாற்றல் நடவடிக்கைகள் காரணமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு தற்போதுள்ள சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது.

5) அனர்த்த ஆபத்து முகாமைத்துவ அளவுகொளாக விளங்கும் தொழில்நுட்பத்தை சர்வதேச ரீதியாக பயன்படுத்திக்கொள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஆற்றல் இருப்பதனால் அதனை சிறந்த வாய்ப்பாக கருதுதல்.

### 2.5.2 இடையூறுகள்

i. கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் குழுக்களை நடத்துதல்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் சுனாமி, மண்சரிவு, வெள்ளப்பெருக்கு போன்ற அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சகல கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்களை நியமித்துள்ளது. மாவட்ட அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை செயற்பட வேண்டிய பிரதான துறைகளை இனங்காணுதல், கிராம உத்தியோகத்தர் பிரிவு அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றது. இதனால் நில மட்டத்திலான அனர்த்த முகாமைத்துவ பணிகளை முன்னெடுப்பதற்காக கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் குழு உறுப்பினர்களின்

ஆற்றலை விருத்தி செய்வது அவசியமாகும். அதேபோன்று கிராமிய மட்டத்திலான உறுப்பினர்களை ஊக்குவிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதலும் முக்கியமானதாகும்.

ii. ஐ.சி.ரி. உபகரணங்களும் பயிற்சியளிப்பும்

- அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அவசர சந்தர்ப்பங்களில் அடிமட்டம்வரை வந்தடைவதற்கு நவீன செயலாற்றுத்திறனுள்ள தொடர்பாடல் கட்டமைப்பபொன்று தேவைப்படுகின்றது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு தற்போது வானொலி தொடர்பாடல் கட்டமைப்பொன்று இருந்தாலும் அது நாட்டில் அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய அனைத்து மக்களையும் உள்வாங்கும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை.

- இதற்கு மேலதிகமாக அனர்த்தங்களுக்கு உள்ளாக கூடியவர்களுக்கு அறிவூட்டுவதற்காக அதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு போதுமான மடிக்கணினிகள் ஊடாக புரஜக்டர்கள், புகைப்படக்கருவி போன்ற உபகரணங்கள் இருத்தல் வேண்டும். அவ்வாறான குறைபாடுகள் இருப்பது பயிற்சி நெறிகளின் குறைபாடுகளை தீர்ப்பதற்கு பெரிதும் வழிவகுக்கின்றது.

- அவசர சந்தர்ப்பங்களின்போது தேடுதல் மற்றும் மீட்பு ஓர் முக்கியமான துறையாகும் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் மேன்மை தங்கிய ஜனாதிபதி காட்டிய வழிகாட்டலுக்கமைய சகல மாவட்டங்களிலும் இராணுவத்தின் தலையீட்டுடன் தேடுதல், மீட்பு குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

- மீட்பு மற்றும் தேடுதல் குழுக்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தேவையான உபகரணங்களின் குறைபாடுகள் உள்ளன. அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதாக இல்லாததுடன் இராணுவத்திடம் இருக்கும் நிதியும் வரையறுக்கப்பட்டுள்ளது.

- இந்தக் குழுக்களின் பணிகளை சர்வதேச தரத்துக்கு கொண்டு வருவதற்காக பயிற்சி வழங்குவது அவசியமாகும். இது தொடர்பாக உதவிகளைப் பெறுவதற்காக JICA, Red Cross, ADPC போன்ற நிறுவனங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் வேண்டுகோள் விடுத்த போதிலும் அவை இன்னும் திருப்திகரமாக வெற்றியளிக்கவில்லை.

iii. மாகாண மட்டத்திலான ஒருங்கிணைப்பு

மாகாண அடிப்படையில் சிரேஸ்ட மட்டத்திலான பிரதிநிதித்துவம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு இல்லாமையினால் மாகாண அடிப்படையிலான

அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அனுபவம் தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன.

iv. அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆய்வு குழு ஒன்று தேவைப்படுகின்றது.

அனர்த்த முகாமைத்துவக் குழுவானது வருடாந்தம் அனர்த்த முகாமைத்துவப் பணிகளை முன்னெடுப்பதற்காக குறிப்பிடத்தக்களவு பணத்தை செலவிடுகின்றது. அனர்த்த முகாமைத்துவப் பணிகளை முன்னெடுப்பதற்காக 2012இல் 260 மில்லியன் ரூபாவும் 2013இல் 506 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது. மேலும் ஐக்கிய நாடுகள் சபைக்குரிய நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பணம் கிடைக்கின்றது.

v. உபகரணங்கள் மற்றும் கட்டமைப்பினை பேணுவதற்காக நிதி போதாமை

அனர்த்த முகாமைத்துவ நிலையம் அவசர நிலைமைகளை அறிவிப்பதற்காக 77 சுனாமி எச்சரிக்கை கோபுரங்களை அனர்த்த ஆபத்து ஏற்படக்கூடிய இடங்களில் பொருத்தியுள்ளதுடன் சகல மாவட்டங்களிலும் வானொலி தொடர்பாடல் கட்டமைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், உபகரணங்களை பேணுதல் என்பவற்றுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு மேலதிக பணம் செலவிடப்பட வேண்டி உள்ளதனால் மேலதிக நிதி தேவைப்படுகின்றது.

vi. தரவுகளை பறிமாற்றிக்கொள்ளல் தொடர்பான பிரச்சினைகள்

மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்களை குறைப்பது தொடர்பான தரவுகளைப் பறிமாறிக் கொள்வதை மேம்படுத்துவதில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னின்று தலைமையேற்று செயற்படுகின்றது. தற்போது அரச துறையில் பல்வேறு நிறுவனங்கள் தரவுகளை பறிமாறிக் கொள்வதில் அக்கறை செலுத்தி வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

vii. காலநிலை மாற்றங்களும் அதில் உள்ளடங்கலான தாக்கங்களும்

காலநிலை மாற்றங்கள் தொடர்பாக கடந்த சில வருடங்களை அவதானிக்கும்போது பல அனுபவங்களை பெற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது. இதனால் எதிர்பார்க்க முடியாதவாறு குறுகிய காலத்துக்குள் கூடிய மழைவீழ்ச்சி ஏற்படல் உட்பட பாரிய அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த பாதகமான காலநிலைத் தன்மை வீடமைப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

viii. தனியார் துறையினரின் கலந்து கொள்ளல்

அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களில் தனியார் துறையினரின் பங்கேற்பினை அதிகரித்துக் கொள்வதற்கான காரணம் அதன் மூலம் சமூகத்துக்கு அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்பினை குறைத்துக்கொள்ள முடிவதுடன் மக்களின் வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்வதற்கும் வசதியாக இருக்கும்.

### 2.5.3 சிபாரிசுகள்

a. அனர்த்த ஆபத்துக்களை குறைப்பது தொடர்பாக சமூகத்தினரின் தொடர்ச்சியான பங்களிப்பினை அதிகரித்துக் கொள்வதற்கு வளங்கள் தேவைப்படுகின்றன.

b. மடிக்கணினிகள் ஊடாக புரஜக்டர்ஸ், புகைப்படக்கருவி தொடர்பாடல் உபகரணங்கள் கொள்வனவு, ஐ.சி.ரி. உபகரணங்கள், எச்சரிக்கை கட்டமைப்புக்கள் மற்றும் அதனை பேணுவதற்கான நிதியும் தேவைப்படுகின்றது.

c. தேடுதல் மற்றும் மீட்பு குழுவினருக்கு உபகரணங்கள் தேவைப்படுவதுடன் தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களுக்கு பயிற்சியளிப்பதற்காக சர்வதேச ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

d. அனர்த்த முகாமைத்துவ நிலையம் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது நிதி உபயோகத்தின் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆராய்வதற்கு ஒழுங்குபடுத்தல் மற்றும் ஆய்வு பிரிவொன்றை அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஏற்படுத்தல் வேண்டும்.

e. பிரதேச அதிகாரிகளின் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை மேம்படுத்தல் வேண்டும். இதற்காக அனைத்து மாவட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அனர்த்த முகாமைத்துவ பணிகளுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் வேண்டுமென சிபாரிசு செய்ய முடியும்.

f. அனர்த்த முகாமைத்துவ தரப்பினருக்கிடையில் தகவல்களை பறிமாறிக் கொள்ளுவதற்கான பொறிமுறையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக பொறிமுறைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

g. காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்காக காலநிலை மாற்றங்களை அளவிட்டுக் கொள்ளுதல் வேண்டும். அனர்த்த ஆபத்து முகாமைத்துவ அளவீட்டினை நிறுவினாலும் கட்டாயம் அனர்த்தம் ஏற்படலாம் என்பதை தொடர்ந்தும் கூறுதல் வேண்டும். எனவே மக்களுக்கான அவசர பதில் நடவடிக்கைகளுக்கான ஆற்றலை பலப்படுத்த முன்னுரிமை வழங்க வேண்டும்.

h. அனர்த்த ஆபத்து முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களின்போது தனியார் துறையினரின் பங்களிப்பினை அதிகரித்துக் கொள்ளுதலும் தனிப்பட்ட முறையில் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்தலும்.

## 3. தேசிய மட்டத்திலான பிரதான நிகழ்ச்சிகள்

### 3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தை திருத்துதல்

2005 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டமூலத்தை திருத்தும் நடவடிக்கைகளை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மேற்கொள்கின்றது. தற்போது சட்ட வரைவினை நடைமுறைப்படுத்துவதற்காக சட்டவரைவு பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.2 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கைத்திட்டம்

**3.3** அனர்த்த முகாமைத்துவக் கொள்கைத் திட்டத்தை தயாரித்தல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. கொள்கைத் திட்டங்கள் அடங்கிய வரைவு கருத்திட்டங்களை பெறுவதற்காக குறிப்பிட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 3.4 தேசிய அனர்த்த முகாமைத்துவத்திட்டம் (NDMP)

2009ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தேசிய அனர்த்த முகாமைத்துவத்திட்டம் கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்ட பாதகமான காலநிலை மாற்றங்கள் காரணமாக மீண்டும் மீளிமைக்க நேரிட்டது. திட்டம் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**தேசிய அவசர கருமமாற்றலுக்கான திட்டம் (NEOP)**

தேசிய அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்ட நகல் தயார் செய்யப்பட்டு வருவதுடன் இது 2013 செப்டெம்பர் ஆகும்போது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.5 கூட்டிணைத்தல் திட்டம்

2010ஆம் ஆண்டில் கூட்டிணைத்தல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இது 2012இல் திருத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 2013-2017 கூட்டிணைத்தல் திட்டத்துக்கு அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் அனுமதி கிடைத்துள்ளது

.

## 3.6 இடைக்கால முகாமைத்துவத்திட்டம் (IMC)

2011 செப்டெம்பர் மாதம் 11ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய அமைச்சரவைப் பத்திர இலக்கம் 12/0790/548/004 மூலம் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கமைய 2012 ஜூன் மாதம் 27ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கு வழங்கப்பட்ட அனுமதிக்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால குழுவின் (IMC) உறுப்பினர்களாக பின்வரும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

1) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின செயலாளர் – தலைவர்
2) நிதி, திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதியொருவர் – உறுப்பினர்
3) பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதியொருவர் – உறுப்பினர்
4) உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் பிரதிநிதியொருவர் – உறுப்பினர்
5) தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் – உறுப்பினர்
6) அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் சிரேஷ்ட கணக்காளர் – உறுப்பினர்
7) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் – செயலாளர்

இந்த இடைக்கால முகாமைத்துவக் குழு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ தீர்மானம் எடுக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளதுடன் மாதாந்தம் இந்தக் கூட்டம் நடைபெறும். இதன் முதலாவது கூட்டம் 2012 ஜூலை மாதம் 26ஆந் திகதி நடத்தப்பட்டது.

## 3.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2012 ஜூலை மாதம் 26ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்ற முதலாவது இடைக்கால முகாமைத்துவக் குழுவில் ஐ.எம்.சி. பத்திர இலக்கம் 04/01/2012ஆம் இலக்க பத்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்ட அனுமதிக்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களாக பின்வரும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1) மேலதிக செயலாளர், பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு – தலைவர்
2) பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் – உறுப்பினர்
3) பிரதான கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு – உறுப்பினர்
4) பொது திறைசேரியின் பிரதிநிதி – உறுப்பினர்

5) கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதிநிதி – உறுப்பினர்

6) பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் – உறுப்பினர்

7) உதவிப்பணிப்பாளர் (நிதி), அனர்த்த முகாமைத்துவ நிலையம் – உறுப்பினர்

8) உள்ளக கணக்காய்வாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் – உறுப்பினர்

இதன்படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முதலாவது கணக்காய்வு குழுக்கூட்டம் 2012 செப்டெம்பர் மாதம் 20ஆந் திகதி நடைபெற்றது. கணக்காய்வு திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படும் கணக்காய்வு கேள்விகள் மற்றும் நிலையத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் தலுவல் அடிப்படையில் வெளியிடப்படும் அறிக்கைகள் இதன்போது கலந்துரையாடப்பட்ட. அதேபோன்று கணக்காய்வு கேள்விகள் தொடர்பாக கணக்காய்வு நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ள பதவிகளின் பயன்பாடு தொடர்பாகவும் மேலதிகமாக கலந்துரையாடப்பட்டது. இதன்பின்னர் அந்த நிலையத்தின் தீர்வுகளுக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக நிலையத்தில் நடைபெறும் பதவியணியினரின் கூட்டங்களின்போது மீண்டும் கலந்துரையாடப்பட்டது. 2012இல் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றன.

### 3.8 2012 – "தேசத்துக்கு மகுடம்" கண்காட்சிக்கான பங்களிப்பு

"தேசத்துக்கு மகுடம்" கண்காட்சி 2012 பெப்ருவரி மாதம் 12ஆந் திகதி அநுராதபுரம் மாவட்டத்தில் ஓயாமடு பிரதேசத்தில் நடைபெற்றது. அனர்த்த முகாமைத்துவ பணிகள் உள்ளிட்ட காட்சிக்கூடமொன்று இதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் அதனை பார்வையிட பெருந்திரளான மக்கள் வருகை தந்தனர். அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளித்தல் இந்த காட்சிக்கூடத்தின் நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக இந்த காட்சிக் கூடம் மூலம் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் பாடசாலைகள் மற்றும் சமூகத்தினருக்கான விளக்கமளிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.





**தேசத்துக்கு மகுடம்**

## 3.9 2012 – தேசிய பாதுகாப்பு தினம்

2012 தேசிய பாதுகாப்பு தினம் பதுளை மாவட்ட செயலகத்தின் உதவியுடன் 2012 டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி பதுளையில் நடத்தப்பட்டது. அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களை நினைவுகூறுதல், பாதுகாப்பான கலாசாரமொன்றை ஏற்படுத்தல், விசேடமாக மாணவர்கள் உட்பட பொதுமக்களுக்கு அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பாக அறிவூட்டுதல், பாதுகாப்புதின விழாவின் முக்கிய அதிதியாக கௌரவ ஷமல் ராஜபக்ஷ கலந்து கொள்டார். பங்காளிகளினால் உயர் ஒத்துழைப்பு வழங்கப்பட்டு பரிசில்கள், தொப்பிகள், டீசேட்டுகள் மற்றும் பதாதைகள் என்பவற்றின் மூலம் அனுசரணை வழங்கப்பட்டன. ஒட்டுமொத்தமான நிகழ்ச்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டதுடன் இதன்மூலம் பொதுமக்களுக்கு அறிவூட்டப்பட்டதுடன் பாதுகாப்பு தொடர்பான கலாச்சாரமொன்றும் ஏற்படுத்தல் இந்த கண்காட்சியின் பிரதான நோக்கமாகும்.

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பதுளை மாவட்டத்தில் நிகழ்ச்சித்திட்டங்கள் பல ஒழுங்கு செய்யப்பட்டன. 10 பாடசாலைகளில் அனர்த்த முகாமைத்துவ தொண்டர் வட்டங்கள் நிறுவப்பட்டன. மேலும் நகர்ப்புறங்களில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக பெயர் பலகைகளை பொருத்துதல், ஸ்டிக்கர்களை விநியோகித்தல் குறிப்பிட்ட நிறுவனங்களின் உதவியுடன் பாதுகாப்பற்ற மின்சாரக் கம்பங்கள் மற்றும் பாதுகாப்பற்ற மரங்களை அகற்றும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

சிவில் பாதுகாப்பு குழுக்களுடன் இணைந்து அனர்த்த தாக்கங்களுக்கு உள்ளாகக் கூடிய மக்களைப் பலப்படுத்தல், கிராமிய அனர்த்த முகாமைத்துவக் குழுக்களைப் பலப்படுத்தல் என்பவற்றுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் மண்சரிவு ஏற்படக்கூடிய பிரதேசங்களில் மக்களுக்கிடையில் அனர்த்த முன்னெச்சரிக்கைகளை மேம்படுத்துவதற்காக 150 மழை அளவீட்டுக் கருவிகள் வழங்கப்பட்டன.

பதுளை மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச அனர்த்த முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன் ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக அறிவூட்டும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

பாடசாலை மாணவர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக மாவட்ட அடிப்படையிலான சித்திரப் போட்டிகளும் தேசிய மட்டத்திலான கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.





### 3.10 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழு (NDMCC)

ஹயோகோ செயற்பாட்டுத் திட்டத்தின் (HFA) தேவைக்கமைய அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒழுங்கமைப்பு பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் தலைமைத்துவத்தை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தலைவர் வகிப்பதுடன் அமைச்சு பிரதிநிதிகள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், பொலிசார், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறையினர் ஆகியோருடன் குறிப்பிட்ட கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகின் (NDMCC) நோக்கம் அனர்த்த தாக்கங்களை குறைப்பதும் அனர்த்த குழுக்களை நியமிப்பதற்காக தேசிய ரீதியில் முயற்சிகளை மேற்கொள்வதாகும். அதன் நோக்கம்,

- தகவல்களை பறிமாற்றுதல், மற்றும் பகிர்ந்து கொள்ளலுக்காக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக செயற்பாடு ரீதியிலான சபையொன்றை ஏற்படுத்தல்.

- அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்கான விவரணங்கள் அனுபவங்கள் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் என்பவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- அனர்த்த ஆபத்து தொடர்பான முகாமைத்துவப் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து அனர்த்த ஆபத்து முகாமைத்துவ செயற்பாட்டாளர்களுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்தல்

2007ஆம் ஆண்டு 6 நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 14 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குழு தற்போது 81 நிறுவனங்களின் பிரதிநிதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. செப்டெம்பர் 24, பெப்ருவரி 24, ஆகஸ்ட் 28, செப்டெம்பர் 21, டிசெம்பர் 20 ஆகிய தினங்களில் 5 கூட்டங்களையும் 2012இல் நடத்தியது.

## 4. தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரின் அறிக்கை

### 4.1 அறிமுகம்

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, சூறாவளி, நகர்சார் இன்னல்கள், மிருகங்கள் தாக்குதல் பரவலாக இடம்பெறுவதை கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான தரவுகள் மற்றும் தகவல்களை பகுப்பாய்வு செய்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தணித்தல், ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அனர்த்தங்கள் காரணமாக அனர்த்த பதில் நடவடிக்கைகள் நிவாரண சேவைகள், புனர்வாழ்வு, மீள்நிர்மாணம் போன்ற நடவடிக்கைகளுக்கு அரசினால் பெருந்தொகையான பணம் செலவிட நேர்ந்துள்ளதனால் இது தேசிய பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அதேபோன்று அனர்த்தங்கள் சுதேச மக்களின் நாளாந்த வருமானத்தின் மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதனால் அவர்களது சமூக வாழ்க்கையும் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படுகின்றது. இதனால் நாட்டில் அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதன் முக்கியத்துவத்தை அனர்த்த முகாமைத்துவ நிலையம் நன்கு புரிந்து கொண்டுள்ளது. அனர்த்தங்கள் மற்றும் அதன் தாக்கங்கள் தொடர்பாக கடந்த அறிக்கைகளை பகுப்பாராய்ந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பலவிதமான அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

### 4.2 2012ஆம் ஆண்டின் தணித்தல் கருத்திட்டத்துக்கான நிதி ஏற்பாடுகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2012ஆம் ஆண்டுக்காக இடர்களை குறைப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட யோசனைகளுக்கு பின்வருமாறு 2012இல் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டது. அட்டவணை **4-1**

### 4.3 அட்டவணை 4-1: 2012ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தணித்தல் கருத்திட்டங்களுக்கான நிதி ஏற்பாடுகள்

| இல. | கருத்திட்டங்கள் | கருத்திட்டத்தின் கால எல்லை | மொத்த மதிப்பீடு கருத்திட்டச் செலவு (ரூ.மி) | 2012ஆம் ஆண்டுக்கான (ரூ.மி) |
|---|---|---|---|---|
| I | மாவட்டங்களில் அனர்த்த ஆபத்துக்கான குறைப்பதற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | | | 122.85 |
| II | பாணந்துறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் வெள்ள அனர்த்தங்களை | 3 வருடங்கள் | 119 | 22.75 |

| இ ல. | கருத்திட்டங்கள் | கருத்திட்டத் தின் கால எல்லை | மொத்த மதிப்பீடு கருத்திட்டச் செலவு (ரூ.மி) | 2012ஆம் ஆண்டுக்க ான (ரூ.மி) |
|---|---|---|---|---|
| | குறைத்தல் | 2012-2014 | | |
| III | கண்டி, மாத்தளை, பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படும் பிரதேசங்கள், மண்சரிவு பரவலாக ஏற்படும் சரிவுகளில் பாதிப்புக்களை குறைத்தல், கற்களிலான தடுப்புச் சுவர்களை அமைத்து பலப்படுத்தல் நடைமுறையிலிருக்கும் கருத்திட்டங்கள் | | | 27.30 |
| IV | யாழ்ப்பாண குடாநாட்டில் வெள்ளப்பெருக்கு ஆபத்தினைக் குறைத்தல் | 3 வருடங்கள் 2012-2014 | 120 | 18.20 |
| V | தம்புள்ளை நகரில் வெள்ளப்பெருக்கு ஆபத்துக்களை குறைத்தல் | 2 வருடங்கள் 2012-2013 | 60 | 18.20 |
| VI | நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் மண்சரிவு ஏற்படும் பிரதேசங்கள் மற்றும் மண்சரிவு ஆபத்துள்ள செங்குத்தான சரிவுகளை தடுப்பு சுவர்களை அமைத்து பலப்படுத்தல் | 2 வருடங்கள் 2012-2013 | 73 | 27.30 |
| | **மொத்த வரவு செலவு** | | | **236.60** |

2012இல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் பின்வரும் பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

### I. மாவட்டங்களில் அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

ஒட்டுமொத்தமாக நாட்டினையே உள்ளடக்கும் வகையில் சகல மாவட்டங்களிலும் அனர்த்த ஆபத்துக்களை குறைக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 122.85 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் அனர்த்தங்களை குறைப்பதற்கான கருத்திட்டங்கள் பின்வரும் அட்டவணை 4-2இல் காட்டப்பட்டுள்ளது. அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்கான முன்னுரிமை அடிப்படையில் இந்த கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வரட்சி, விலங்குகளின் தாக்குதல் போன்ற பிரதான அனர்த்தங்கள் நிலவும் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்களுக்காக வரவு செலவு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விதம் பின்வரும் படம் 4.1இல் நிதி ஒதுக்கங்கள் வீதத்தில் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4-2: பிரதான அனர்த்தங்களின் தாக்கங்களை குறைப்பதற்கான முன்னுரிமை அடிப்படையில் 2012ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கம்**

| இடர் | உள்ளடங்கும் மாவட்டங்கள் | நிதி ஏற்பாடு (ரூ.மி) |
|---|---|---|
| விலங்குத் தாக்குதல் | மாத்தறை, ஹம்பாந்தோட்டை | 5.07 |
| வரட்சி | குருநாகல், வவுனியா, பதுளை, அம்பாந்தோட்டை, விளிநொச்சி | 34.61 |
| வெள்ளம் | காலி, யாழ்ப்பாணம், இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, கண்டி, அநுராதபுரம், மன்னார், கிளிநொச்சி, புத்தளம் | 74.73 |
| மண்சரிவு, மலைச்சரிவு, பாறைகள் விழுதல் | காலி, மாத்தறை, கேகாலை, கண்டி, ஹம்பாந்தோட்டை | 8.39 |
| | **மொத்தம்** | **122.80** |

**அட்டவணை 4-1: பிரதான இடர்களின் தாக்கங்களை குறைப்பதற்கான முன்னுரிமை அடிப்படையில் 2012இல் நிதி ஒதுக்கங்கள் வீதங்களில்**




* விலங்குகள் தாக்குதல்
* வறட்சி
* வெள்ளம்
* மண்சரிவு மற்றும் பாறைகள் சரிவதை தடுத்தல்

நிதி ஆண்டு முடிவதற்குள் வரவு செலவுப்பணத்தில் 77.5(63.1%) மில்லியன் ரூபா செலவிடப்பட்டதுடன் அந்த பெரும்பாலான கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றமும் 80% அடைந்துள்ளது. எதிர்பார்த்த விதமாக ஏற்பட்ட சீரற்ற காலநிலைகளினால் ஹம்பாந்தோட்டை, மன்னார், வவுனியா, குருநாகல், யாழ்ப்பாணம், அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பணிகளை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. இந்த கருத்திட்டங்களை 2013ஆம் வருடத்தின் முதல் தவணையில் பூர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**II. பாணந்துறை மற்றும் களுத்துறை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களை குறைத்தல்**

வெள்ளப் பெருக்கு காரணமாக பாணந்துறை நகர பிரதேசம் வெள்ளத்தினால் மூழ்குவதினால் காலி வீதியை சுற்றி வாழ்பவர்களின் கடும் வெள்ளப்பெருக்கு நிலைமையினை எதிர்பார்க்கின்றார்கள். இந்த வெள்ளப்பெருக்கு காரணமாக வருடாந்தம் ஏற்படும் நட்டம் மற்றும் சேதம் பாரியளவில் இருப்பது தேசிய பொருளாதாரத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த விடயங்களை கருத்தில் கொண்டு பாணந்துறை நகரில் வெள்ளப்பெருக்கு நிலைமைகளை குறைப்பதற்கான திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட உள்ளது. இந்த கருத்திட்டத்தின் பிரதான செயற்பாடாக பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில் மோட்எல, கப்புஎல் போன்றவற்றில் காணப்படும் தடைகளை நீக்கி அதனை துப்பரவு செய்வதற்கும் பொல்கல வாவிக்கு வரும் நீரின் அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சிறு கூட்டமைப்புக்களை ஏற்படுத்தல், புனரமைப்பு, சுதந்திரமாக வழிந்தோடும் நீர் நிலைகளை பாதுகாத்தல் என்பவற்றுக்கு மதகுகளை விஸ்தரித்தல் என்பன இடம்பெற உள்ளன.

2012இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் கால வரையறை 3 மாதங்கள் என்பதுடன் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு அன்னளவாக 139 மில்லியன் ரூபாவாகும். 2013ஆம் ஆண்டில் இதற்காக 22.75 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன் சகல இலக்குகளையும் பூர்த்தி செய்து இதில் 19 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

**III. கண்டி, மாத்தளை, பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் மலைச்சரிவுகள் ஏற்படும் பிரதேசங்களில் / மற்றும் மண்சரிவுகள் அதிகமான பகுதிகளில் அனர்த்த பாதிப்புக்களை குறைக்கும் வகையில் தடுப்பு சுவர்களை நிர்மாணிதத்ல்**

இந்த கருத்திட்டம் 2009இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் மூன்று வருடங்களில் நிறைவு செய்யப்பட உள்ளது. கருத்திட்டத்தின் விசேட தன்மையை பார்க்கும்போது கருத்திட்ட வலயத்தில் மண்ணில் காணப்படும் செழிப்புத் தன்மையினால் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேறு விதமான ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. தேசிய கட்டிட ஆய்வு நிலையம் தனது கருத்திட்டம் பணிகளை மேற்கொள்வதற்காக

ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ண்டுள்ளது. கருத்திட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் செலவு மதிப்பீட்டின் சுருக்கம் பின்வருமாறு அட்டவணை 4-3இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4-3: மண்சரிவினை குறைப்பதற்கான கருத்திட்ட செயற்பாடுகள், வரவு செலவு மதிப்பீடு மற்றும் மாவட்டங்களின் விபரங்கள்.**

| விடயம் | தொகை (ரூ.மி) |
|---|---|
| நுவரெலியா மாவட்டத்தில் பதியபெலல்ல நகரத்தில் மண்சரிவு ஏற்படும் பகுதிகளை பாதுகாத்தல் | 44.00 |
| கண்டி மாவட்டத்தில், பேராதெனிய நகரத்தில் மண்சரிவு ஏற்படும் பபகுதிகளை பலப்படுத்தல் | 102.00 |
| மாத்தளை மாவட்டத்தில் அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்காக மனிதர்களினால் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்களை குறைப்பதற்கு பூமியை பயன்படுத்தும்போது பயன்படுத்த வேண்டிய விடயங்களை நடைமுறைப்படுத்தல் | 2.43 |
| பதுளை மாவட்டத்தில் நகர்ப்புறச் சரிவுகள் மற்றும் மண்சரிவு பகுதிகளை இனங்காணுதல், அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்காக பூமியை பயன்படுத்தல் தொடர்பாக அலுவலகங்களை அறிமுகப்படுத்தல் | 3.50 |
| **மொத்த கருத்திட்ட செலவு** | **151.93** |

கருத்திட்ட செயற்பாடுகள் பெரும்பாலும் பூர்த்தியடைந்துள்ளதுடன் இதற்காக தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்துக்கு 145 மில்லியன் ரூபா செலுத்தப்படவுள்ளது.

## IV. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெள்ளப்பெருக்கு பாதிப்புக்களை குறைத்தல்

கிடைத்துள்ள தகவல்களின்படி கடந்த சில வருடங்களாக வெள்ளப்பெருக்கு நிலைமைகள் அதிகரித்ததனால் இது பலருக்கு பாதகமாக முடிந்துள்ளது. இதனால் அந்த மாவட்டத்தில் ஏற்படும் அழிவுகளிலிருந்து மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாப்பதற்காகவும் மழைக் காலத்தில் மழையினால் ஏற்படும் அச்சத்தை நீக்கி அவர்களது வதிவிடங்களில் நிம்மதியாக வாழ்வதற்காகவும் அதற்கான வாய்ப்பினை வழங்கி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் வெள்ளப்பெருக்கு குறைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது. 3 வருட காலத்தைக் கொண்ட இந்த கருத்திட்டத்துக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தத்தொகை 120 மில்லியன் ரூபாவாகும் என்பதுடன் அதில் 18.2 மில்லியன் ரூபா 2012ஆம் ஆண்டுக்காக பொது திறைசேரியிடமிருந்து வழங்கப்பட்டது. எவ்வாறாயினும் இப்பணத்தில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு 2012ஆம் ஆண்டு 12 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்தது. 2012இல் கருத்திட்டத்தில் காணப்பட்ட செயற்திட்டங்களில் 85% பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும் வருட இறுதியில் இரண்டு மாதங்களுக்குள் எதிர்பார்க்கப்படாத

பாதகமான காலநிலையினால் இலக்கு வைக்கப்பட்ட வேலைகளில் 15% வீதத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. இந்த பணிகளை 2013ஆம் அண்டின் முதலாவது தவணைக்குள் முடிப்பதற்குத் தீர்மானிகக்ப்பட்டுள்ளது.

**V. தம்புள்ளளை நகரில் வெள்ளப்பெருக்கினை குறைத்தல்**

தம்புள்ளை பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளப்பெருக்கினை கட்டுப்படுத்தும் கருத்திட்டம் 2012-2014ஆம் ஆண்டுவரை மூன்று வருடகால கருத்திட்டமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்துக்காக மதிப்பிடப்பட்ட மொத்த செலவினமான 60 மில்லியன் ரூபாவில் 18.20 மில்லியன் ரூபா 2012ஆம் அண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டத்தின் மூலம் மிரிஸ்கேனியா வாவியின் நீர் வடிந்தோடுதலை உறுதி செய்வதற்காக ஆற்றில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு அதனை துப்பரவு செய்தல், ஆற்றை விரிவாக்குதல், அணைக்கட்டை பலப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட செயலகம், நீர்ப்பாசனத் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தம்புள்ளை நகர சபையினால் கருத்திட்டம் ஆரம்பிக்கபட்டது. தற்போது கருத்திட்டத்தின் 60%மான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**VI. நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் மலைச்சரிவுகள் ஏற்படும் பிரதேசங்களிலும் மண்சரிவு ஆபத்துள்ள பிரதேசங்களிலும் பாதிப்புக்களை குறைப்பதற்காக தற்காலிக தடுப்பு சுவர்களை அமைத்து பலப்படுத்துதல்.**

இந்த கருத்திட்டம் 2012ஆம் ஆண்டு அனுமதிபக்கப்பட்டதுடன் 3 வருட கருத்திட்ட காலத்துக்காக கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த, வரவு செலவு திட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட தொகை 73 மில்லியன் ரூபாவாகும். கருத்திட்டத்தை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் ஊடாக நடைமுறைப்படுத்த பிரேரிக்க்பபட்டதுடன் கருத்திட்டத்தின் ஆரம்ப கற்கைக்காக 2011இல் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்துக்கு 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. தேசிய கட்டிட ஆய்வு நிலையத்தின் வேண்டுகோளுக்கமைய கருத்திட்டத்தின் விபரமான பணிகளுக்காக மேலும் 3 மில்லியன் ரூபா மேலதிகப்பணம் 2012இல் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் கற்கை முடிந்ததன் பின்னர் கருத்திட்டத்துக்காக செலவாகும் மொத்தப் பணம் 98 மில்லியன் ரூபா செலவு தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டது. இதில் 9.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்த நிதி ஏற்பாடுகளுக்கமைய கருத்திட்டத்தின் பணிகள் 2012இல் தேசிய கட்டிட ஆய்வு நிலையயத்தினால் பூர்த்தி செய்யப்பட்டது.

## 4.3 தணித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் ஏனைய செயற்பாடுகள்

### 4.3.1 தொழில்நுட்ப ஆலோசனனைக் குழுவின் செயற்பாடுகள் (TAC)

தொழில்நுட்ப ஆலோசனைக் குழு பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஓரளவு அரச நிறுவனங்கள் என்பவற்றின் திறமை வாய்ந்த தொழில்சார் நிபணர்களைக் கொண்டுள்ளதுடன் மாதத்துக்கொரு தடவை கூறுகின்றது.

**“எனது வீட்டை எவ்வாறு பாதுகாப்பாக நிர்மாணிக்கலாம்”** என்ற கைநூல் உதாரணங்களுடன் நடைமுறை ரீதியிலான செயற்பாட்டுடன் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

‘‘வீதிகளை நிர்மாணிப்பதற்கான துணைக்குழுவின் வழிகாட்டி’’ தலைமை தொழில்நுட்ப ஆலோசனைக்குழு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி நிர்மாண வழிகாட்டி நூல் மற்றும் வீதிகளை ஒழுங்கமைப்பதற்கான அனர்த்த பாதிப்புக்களை குறைப்பது தொடர்பான அளவை பணிகளை கூட்டிணைத்தலை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இலங்கையில் அண்மையில் இடம்பெற்றுள்ள நில நடுக்கங்கள் தொடர்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கான துணைக்குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

**அனர்த்தங்கள் பரவலாக ஏற்படக்கூடிய பிரதேசங்களில் நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதற்கான அபிவிருத்தி வழிகாட்டி:** அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புள்ள பிரதேசங்களில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்காக 2007ஆம் ஆண்டு நிருவப்பட்ட தொழில்நுட்ப ஆலோசனை குழு (TAC) வுக்குரிய விடயம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் விஸ்தரிக்கப்பட்டது. சுனாமி, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய பிரதேசங்களில் வீடுகள் மற்றும் சிறு அளவிலான நிர்மாணப் பணிகளுக்காக கட்டிடங்களை நிர்மாணித்தல் தொடர்பான வழிகாட்டிகளை அச்சிடும் பணிகள் 2012இல் ஆரம்பிக்கப்பட்டது.

**நில நடுக்கங்களை தாங்குபிடிக்கக்கூடிய கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பான வழிகாட்டி:** மத்திய பொறியியலாளர் ஆலோசனை பணியகத்தின் அலோசனை ஆராய்ச்சி அபிவிருத்திக்கான பொது முகாமையாளர் கே..எல்.எஸ். சஹுபந்துவின் தலைமையில் நில அதிர்வினை தாங்குப்பிடிக்கக்கூடிய கட்டிடங்களை நிர்மாணிப்பது சம்பந்தமாக அதற்கான அபிவிருத்தி வழிகாட்டி 2011 தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினால் துணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. தேசிய கட்டிட ஆய்வு நிலையம், பேராதனை பல்கலைக்கழகம், மொறட்டுவை பல்கலைக்கழகம் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி ஏனைய கல்விமான்கள் தொழில் நிபுணர்கள் என்போர் இந்தக்

குழுவில் அங்கத்துவம் பெற்றனர் என்பதுடன் 2012இல் செயற்பாட்டு முன்னேற்றத்தை ஆய்வு செய்தனர்.

தொழில்நுட்ப ஆலோசனைக் குழுப் பணிகளின் கீழ் பலதரப்பட்ட நிருவனங்களினால் பின்வரும் செயற்பாடுகள் 2012இல் நடைமுறைப்படுத்தப்பட்டன:

- பேராதனை பல்கலைக்கழகத்தின் சிவில் பொறியியலாளர் பிரிவினால் இலங்கை தொடர்பான நில அதிர்வு அனர்த்தங்கள் தொடர்பான வரைபடங்களை மேம்படுத்தல் தொடர்பான ஆராய்ச்சி,

- மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் நில அதிர்வு தொடர்பான அனர்த்த வலயங்களுக்காக நிர்மாண குறிகாட்டிகளை அறிமுகம் செய்தல்,

- விசேடமாக கொழும்பினை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் நில அதிர்வுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் நிர்மாண கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் 3D பக்கவெட்டொன்றை அபிவிருத்தி செய்தல், தேசிய கட்டிட நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**நடைமுறையிலிருக்கும் வீதிகள் நிர்மாண வழிகாட்டி மற்றும் அனர்த்த ஆபத்துக்களை குறைப்பது தொடர்பான அளவு கோள்களை உரிய துறையினருக்கு கூட்டிணைப்பதை ஆய்வு செய்வதற்கான குழு:** நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகாரசபையின் திரு. ஜே. ஜயமான்ன அவர்களின் தலைமையில் 2012இல் இந்தக்குழு ஏற்படுத்தப்பட்டது. இதன் செயற்பாடுகளை 2013ஆம் ஆண்டு முதற்காலாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.2 அனர்த்த பக்கவெட்டுக்களை அபிவிருத்தி செய்தல் கருத்திட்டம்

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அனர்த்த ஆபத்து முகாமைத்துவம் ஆசிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வரும் மண்சரிவு, வெள்ளப்பெருக்கு, சூறாவளி, இடிமின்னல் போன்ற நகர்ப்புற அனர்த்தங்களின் போது இந்த அனர்த்தங்கள் தொடர்பான குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2012 டிசெம்பர் மாதம் 26ஆந் திகதி பதுளையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்புதின திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட www.hazard.lk என்ற தகவல் கட்டமைப்பு மற்றும் அந்த அறிக்கையின் இறுதி தயாரிப்பாளராகும்.

- நகர்ப்புற அனர்த்தங்களின் கீழ் சுனாமி, நகர்ப்புறங்களில் மழைநீர் வழிந்தோடுதல், கடல் நீர் மட்டம் அதிகரித்தல், கடல் அலை நீர் போன்ற நான்குவகை அனர்த்தங்கள் தொடர்பான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- நுவரெலியா மற்றும் காலி மாவட்டங்களில் மண்சரிவு அனர்த்தங்கள் தொடர்பாக 1:10,000; அளவிலான அளவைப்படங்களை தயாரித்தல் மற்றும் ஏனைய ஆபத்துள்ள 8 மாவட்டங்கள் தொடர்பாக 8 மாவட்டங்களுக்காக 1:50 000 அளவிலான மண்சரிவு அனர்த்தங்கள் தொடர்பான வரைபடங்களை தயாரித்தல் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் உதவியுடன் விவசாயத் திணைக்களத்தினால் வரட்சி தொடர்பான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.

- வளிமண்டலவியல் திணைக்களத்தினால் சூறாவளி மற்றும் மண்சரிவுகள் தொடர்பான அனர்த்தங்கள் தொடர்பான வரைபடங்களை தயாரித்தல்

- நீர்ப்பாசன திணைக்களத்தினால் ஈரவலயத்திலுள்ள பிரதான ஐந்து ஆறுகளின் பல்லத்தாக்குகளான களனி கங்கை, களுகங்கை, நீல்வள கங்கை, அத்தகலு ஓயா போன்றவற்றின் வெள்ளப்பெருக்குகள் தொடர்பான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 4.3.3 ஒருங்கிணைந்த மூலோபாயங்களினூடாக சூழல் மதிப்பீடுகளை மேற்கொள்ள அபிவிருத்தி செய்தல் (ISEA)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) உதவியுடன் வடமாகாணத்திற்கான ஒருங்கிணைந்த மூலோபாய சூழல் மதிப்பீட்டினை பூரணப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தியுள்ளது. மூலோபாய சூழல் மதிப்பீடு வடமாகாணம் தொடர்பான விபரங்கள் மற்றும் வரைபடங்கள் www.isea.lk என்ற தகவல் தொழில்நுட்பத்தின் ஊடாகவும் மற்றும் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் இருக்கும் தரவுகளைப் பயன்படுத்துவதற்கு பயிற்சிபெற்றுள்ள திட்டமிடல் உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நாட்டின் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் துரிதமாக இடம்பெறுவதனால் அனர்த்த முகாமைத்துவ நிலையம் இந்த வேலைத்திட்டத்தை கம்பஹ மாவட்டம், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் நடைமுறைப்படுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி ந4ிகழ்ச்சித் திட்டத்தினால் பங்களிப்பு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல் மற்றும் நிதி அனுசரணை வழங்குதல் என்பன இடம்பெறுகின்றன. தரவுகளை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் ஒட்டுமொத்தமான திட்டத்தை 2013 முதலாவது தவணை முடிவதற்குள் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளன.

### 4.3.4 ஜியோநோட் தரவுகள் பறிமாறல் புகுவழியை ஏற்படுத்தல்

அனர்த்தங்களை குறைத்தல், அவை சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பூகோள வசதிகளுடன் ஜியோநொட் தரவுகள் பரிமாறல் புகுவழி

www.riskinfo.lk அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்களுக்கு திட்டமிடுபவர்களுக்கு தீர்மானம் எடுப்பவர்கள் மற்றும் ஒட்டுமொத்தமான பொதுக்களுக்கு அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவது இந்த புகுவழியின் நோக்கமாகும். தகவல் பரிமாறல் எண்ணக்கரு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் தகவல் பரிமாறல் கொள்கை மற்றும் செயற்பாட்டினை தயார்செய்வதற்காக உயர்மட்ட சந்திப்புக்களை ஏற்படுத்தி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் அதனை 2013 ஆண்டில் முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.5 அனர்த்த தாக்கங்களை மதிப்பிடுதலுக்கான கட்டமைப்பினை ஏற்படுத்தல்

அனர்த்தங்கள் தொடர்பான தாக்கங்கள் தேசிய பொருளாதார அபிவிருத்தியில் ஏற்படுத்தும் கடும் பாதகமான விளைவுகளை கருத்தில் கொண்டு யப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் நெடுஞ்சாலை அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றினால் 2010ஆம் ஆண்டு தொடக்கம் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் அனர்த்த முகாமைத்துவ ஆற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நெடுஞ்சாலை கட்டமைப்பின் அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடுவதற்கான கட்டமைப்பினை ஏற்படுத்த அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னின்று நடவடிக்கை எடுத்துள்ளது.

அனர்த்த தாக்கங்களை மதிப்பீடு செய்யும் கட்டமைப்பு எண்ணக்கருவை பரீட்சித்துப் பார்ப்பதற்காக இலங்கையை பயன்படுத்துவதை கருத்தில் கொள்ளும்போது எதிர்வரும் நாட்களில் வேறு அபிவிருத்திப் பணிகளுக்காகவும் உயர்மட்டத்தில் பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆக்கமட்டங்களில் பல்வேறு வேறுபாடுகளை இனங்கண்ட போதிலும் பெரும்பாலான பிரிவுகளில் அவர்களினால் அனுமதித்துக் கொள்ளப்பட்ட ஆக்க மற்றும் பராமரிப்பு கட்டமைப்புக்கள் அவர்களுக்கு உண்டு. நிர்மாணிப்பு பணிகள் மற்றும் பராமரிப்புக்களின்போது அனர்த்த பாதிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் பொருட்டு அதற்கான கட்டமைப்புக்களை இற்றைப்படுத்தல் இதன் பணியாகும். அதேபோன்று அனர்த்தங்கள் ஏற்பட்டதன் பின்னர் அனர்த்த தாக்க அடிப்படையில் தகவல்களை பாரியளவில் திரட்டக்கூடிய வகையில் இந்த கட்டமைப்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வீதிகள் கட்டமைப்பில் அனர்த்த தாக்கங்களை குறைத்தல் அதனை சுய பயிற்சி உபகரணமாக நடைமுறைப்படுத்தல் என்பவற்றுக்கு வீதிகள் அபிவிருத்தி அதிகாரசபை உடன்பட்டுள்ளது.

### 4.3.6 இலங்கையில் அபிவிருத்தியை திட்டமிடும்போது அனர்த்த பாதிப்புக்களை குறைப்பதற்கான பிரதான நீரோட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பங்களிப்புடனான அபிவிருத்தி கருத்திட்டம் (PIP) - கட்டம் 3

தாய்லாந்தின் பாங்கொக் நகரில் உள்ள ஆசிய அனர்த்த முன்னாயத்த நிலையம் கருத்திட்டத்துக்கான நிதி அனுசரணையை வழங்குவதுடன் கருத்திட்டத்தின்

செயற்பாடுகளை இனங்காணுவதற்காக பங்களிப்பு நிறுவனங்களின் கலந்து கொள்ளலுடன் இதன் முதலாவது சந்திப்பு நடத்தப்பட்டது. குறிப்பிட்ட நிறுவனங்களுடன் பின்வரும் செயற்பாடுகள் இனங்காணப்பட்டு அதற்கான இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

- இலங்கையில் மூன்று அனர்த்தங்களின்போது அனர்த்த பாதிப்பு குறைப்பு பிரிவு (DRR) கூட்டிணைத்தல் மற்றும் இரண்டு செயலமர்வுகளை பிரதேச மட்டத்தில் உள்ள நகர அபிவிருத்தி உதவியாளர்களுக்காக நடத்துதல்.

- தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை பிரதேசங்களில் வீடமைப்பு நிர்மாணங்களை அனுமதிக்கும் செயற்பாட்டின்போது அனர்த்த பாதிப்புக்களை குறைப்பதற்கான கூட்டிணைத்தலுக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

- இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட கரையோரப் பகுதிகளில் விமான மற்றும் புகையிரத முன்னோடி பரிசீலனைகளுக்கான அனுமதிப்பத்திரங்களை திருத்தும் போதும் பரிசீலிக்கும் சட்ட ஆலோசனைகளை வழங்குதல். கடலோரப் பாதுகாப்பு, கரையோரவள முகாமைத்துவ திணைக்களத்தினால் ஆய்வு செய்யப்பட்டுவரும் கரையோர மற்றும் கரையோரவள முகாமைத்துவத் திட்டத்துக்கு அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதை கூட்டிணைக்கும்போது உதவுதல்.

- தரவுகள் பரிமாற்றல் முறையொன்றை இனங்காணுவதற்காக தேசிய சபைக்கு வசதிகளை வழங்குதலும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொழில்நுட்ப திறமைசாலிகளினால் வழங்கப்படும் பயிற்சியின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் அனர்த்த ஆபத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல்.

- தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சின் ஆளணி உத்தியோகத்தர்கள் 32 பேருக்காக வதிவிட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை 2012 ஜுன் மாதம் 22 மற்றும் 23ஆந் திகதிகளில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஆசிய அனர்த்த முன் ஆயத்த நிலையத்தினால் நிதி அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

- முன்னுரிமை நடைமுறைப்படுத்துவதற்கான கலந்து கொள்ளல் மூலமான அபிவிருத்தி கருத்திட்டத்தின் கட்டம் 3 இன் வெளியீடுகளின் ஆக்கவிளைவுகளை அளவிடுவதற்காக 3 கட்டங்களின் இறுதி காலத்தில் தேசிய செயலமர்வு ஒன்றை நடத்துதல்.

தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சின் ஆளணியினர் 32 பேருக்கு இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று 2012 ஜுன் மாதம் 22 மற்றும்

23ஆந் திகதிகளில் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக ஆசிய அனர்த்த முன் ஆயத்த நிலையத்தினால் நிதி அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.




### 4.3.7 தேசிய மட்டத்தில் அனர்த்த ஆபத்துக்களை குறைப்பதற்கான கருத்திட்ட நுழைவாயிலை அபிவிருத்தி செய்தல்

இலங்கையில் அபிவிருத்தி திட்டங்களிலான ஆபத்துக்களை குறைப்பதற்காக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் காரணிகளை இனங்காணுவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (NPD) ஆற்றலை அளவிடுதல் மற்றும் அதனை முன்நடத்திச் செல்வதை மேம்படுத்துவதற்காக அனர்த்த ஆபத்து முன்னாயத்த நிலையத்தினால் வழங்கப்படும் நிதி அனுசரணையுடன் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தேசிய வலைப்பின்னல் நுழைவாயில் ஒன்றை அபிவிருத்திசெய்ய பொறுப்பேற்றது. நாட்டின் அனைத்து கருத்திட்டங்களின் போதும் அனர்த்த ஆபத்துக்களை குறைத்தல் DRR மற்றும் மொத்த முதலீடுகளை இனங்காணும்போது வசதிகளை வழங்குவது இந்த கட்டமைப்பின் நோக்கமாகும். 2012இல் வலைப்பின்னல் நுழைவாயில் அபிவிருத்திக்கு ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் 2013இல் முதலாவது கருத்திட்டப் பணிகளை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.8 வேறு சர்வதேச ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம்

I. செயற்பாட்டு ஹயோகோ கட்டமைப்பின் (HFA) மத்தியகால முன்னேற்றத்தை ஆய்வு செய்வதன் மூலம் தேசிய அலோசனை இது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் மத்தியகால முன்னேற்ற அறிக்கை UN-ISDRக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

II. பிராந்தியத்துக்கு பொருத்தமான அனர்த்த குறைப்பு முகாமைத்துவ (DRM) முறையொன்றை அறிமுகம் செய்துவைப்பதற்கு (SAARC) பிராந்திய நாடுகளுக்கிடையில் பிராந்திய அனர்த்த முகாமைத்துவ (DRM) பணிகளை பகுப்பாய்வு செய்வதற்கு SAARC அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு (SDMC) ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

III. அனர்த்த ஆபத்து குறைப்பு பிரதான நீரோட்டம் (MDRR) நிர்மாணத்துறைக்கு உட்புகுத்துவதற்கான பயிற்சிநெறி:

அபிவிருத்தி பிரிவுக்கு அனர்த்த ஆபத்து குறைப்பு (DRR) பயிற்சியளிப்பு உட்பட தொழில்நுட்ப கல்வித் திணைக்களத்தின் ஆலோசகர்களுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் பயிற்சி பட்டறைகளை நடத்தியுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 03 பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன. 132 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் 08 ஆலோசகர்களுக்கும் இதன் மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP) இதற்கு அனுசரணை வழங்கியுள்ளது.

### 3.3.9 டிஸ்.ஸ்வென்டர் (DesInventar) தரவு கட்டமைப்பு

அனர்த்த தகவல் முகாமைத்துவக் கட்டமைப்பு (DesInventar) இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக தரவுகளை முறையாக சேகரித்தல், அவற்றை அறிக்கையிடுதல் மற்றும் பகுப்பாய்வு செயற்வதற்கான ஓர் முறையாகும். இவை அனர்த்தங்களின் தன்மைகள் மற்றும் அவற்றின் தாக்கங்களை பகுப்பாய்வு செய்வதற்காக முறையாக உதவும் ஓர் உபகரணமாகும். அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய நிலைமைகள் அதிகரித்துள்ளமை மற்றும் அவற்றின் தாக்கங்கள் தொடர்பான புரிந்துணர்வு அதிகரித்துள்ளதுடன் சமூகத்துக்கு அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பது மற்றும் தடுத்தல், தணித்தல், முன்னாயத்தங்கள் தொடர்பாக திட்டமிட முடியும். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அனர்த்த தணிப்புக்கான முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பாங்கொக்கில் உள்ள பிராந்திய நிலையத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் 1974 தொடக்கம் இன்று வரை கடந்த அனர்த்த சம்பவங்களின் அடிப்படையில் தகவல் கட்டமைப்பின் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. தகவல் கட்டமைப்பினை முறையாக இற்றைப்படுத்துவதற்காக தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தேவையான இற்றைப்படுத்தல்கள் 2012இல் மேற்கொள்ளப்பட்டன.

### 4.3.10 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தரவுகள் களஞ்சியம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகபூர்வ தரவுகள் களஞ்சியம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏனைய அனர்த்தங்கள் தொடர்பாக தகவல்களை பகிர்ந்தளிக்கும் இலத்திரனியல் ஊடகமாகும். தகவல்களை இற்றறைப்படுத்தல், புதிய அனர்த்தங்கள் தொடர்பான நிலைமை சான்றிதழ்களை வழங்குதல் இன்றுவரை இந்த களஞ்சியத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இந்த தரவுகள் களஞ்சியம் மும்மொழிகளிலான தகவல் களஞ்சியம் என்பதுடன் 2007ஆம்

ஆண்டு தொடக்கம் நடைமுறையிலிருக்கின்றது. 2012ஆம் ஆண்டுக்கான இற்றைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 5 முன்னாயத்த திட்டமிடல் பிரிவின் பணிப்பாளரின் அறிக்கை

### 5.3 அறிமுகம்

முன் ஆயத்த திட்டமிடல் பிரிவு மாவட்டங்கள், பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அடிப்படையில் தேசிய அனர்த்த திட்டமிடல் முகாமைத்துவ திட்டமிடல் அபிவிருத்தி மற்றும் ஒருங்கிணைப்பு, வழிகாட்டிகள், அனர்த்த முன்னாயத்தங்கள் அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் என்பவற்றை தயாரிக்கும் போது அதற்கு உதவும் பொருட்டான நடவடிக்கைகளின் பொறுப்பினை ஏற்கின்றது. மேலும், அனைத்து அரசதுறை நிறுவனங்களின் அனர்த்த முகாமைத்துவ திட்டமிடலை அபிவிருத்தி செய்வதில் ஒத்துழைப்பு வழங்குவதும் இப்பிரிவின் பொறுப்பில் இருக்கின்றது.

### 5.2. பல்வேறு மட்டங்களில் அனர்த்த முன்னாயத்தங்கள் அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் (DPERPs)

#### 5.2.1 மாவட்ட DPERPs அபிவிருத்தி செய்தல்

வழங்கப்பட்டுள்ள அனர்த்த முன்னாயத்தம் மற்றும் அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடலில் மாவட்ட மற்றும் பிரதேச குழுக்களின் உறுப்பினர்களின் பெயர்கள், செயற்பாடுகள், பொறுப்புக்கள், மாவட்ட அடிப்படையிலான அடிப்படை தரவுகள் பிரதேச அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ளல், வளங்கள் மற்றும் அனர்த்த பதில் நடவடிக்கைகளின்போது இதில் பங்களிப்பு வழங்குபவர்களின் பொறுப்புக்கள் இதில் உள்ளடங்குகின்றன.

2011ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ மாவட்ட முன்னாயத்த அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் 16 உருவாக்கப்பட்டிருந்தன. 2012ஆம் ஆண்டு கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மொனராகலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நகல் திட்டங்கள் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 24 மாவட்டங்களில் DPERPs திட்டமிடல் 8 மாவட்டங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 5.2.2 பிரதேச ஹீநுசீள களை அபிவிருத்தி செய்தல்

2012இல் வரவு செலவு நிதி ஒதுக்கத்தின் கீழ் பிரதேச திட்டமிடலை அறிமுகம் செய்துவைத்தல் மற்றும் ஆரம்பிப்பது தொடர்பான 21 செயலமர்வுகள் நடத்தப்பட்டதுடன் இறுதி பிரதேச திட்டமிடல் நகல்கள் பங்காளி நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்காக 14 செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்த செயலமர்வுகள்

தொடர்பான விபரங்களின் அட்டவணை 5-1இன் மூலம் காட்டப்பட்டுள்ளன. வருடத்தில் 5 பிரதேச திட்டமிடல்கள் அச்சிட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை 5-1: பிரதேச திட்டங்கள் DPERPகளை தயாரிப்பதற்காக நடத்தப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதி செயலமர்வு**

வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக தொடர்ந்தும்

| மாவட்டம் | பிரதேச ஆரம்ப செயலமர்வு | பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச ஆரம்ப செயலமர்வு | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|---|---|
| அம்பாறை | 01 | அட்டாளைச்சேனை | - | - |
| அநுராதபுரம் | 01 | பதவிய | - | - |
| பதுளை | 02 | கந்தகெட்டிய, வெளிமடை | 01 | ஹல்துமுல்ல |
| மட்டக்களப்பு | 01 | கோறளைப்பற்று வடக்கு | - | - |
| நுவரெலியா | 02 | கொத்மலை, வலப்பனை | 02 | அம்பகமுவ, கொத்மலை |
| காலி | 02 | பட்டினமும் சூழலும் பெற்தோட்ட | 01 | அம்பலாங்கொடை |
| ஹம்பாந்தோட்டை | - | - | 01 | கட்டுவன |
| கண்டி | 02 | அக்குரனை, நாவலப்பிட்டிய | 01 | பூஜாபிட்டிய |
| குருநாகல் | - | - | 01 | பன்னல |
| கேகாலை | - | - | 02 | கேகாலை |
| மாத்தளை | 02 | யட்டியாந்தோட்ட, கலேவெல | 01 | கலேவெல |
| மாத்தறை | 02 | மாத்தறை, வெலிகம | 01 | மூலட்டியன |
| மொனறாகலை | 01 | மொனறாகலை | - | - |
| புத்தளம் | 01 | ஆரச்சிகட்டுவ | 01 | நாத்தாண்டி |
| மன்னார் | 02 | முசலி, மடு | 01 | மடு |
| யாழ்ப்பாணம் | 01 | சாவகச்சேரி | - | - |
| கிளிநொச்சி | 01 | பூநகரி | - | - |
| **மொத்தம்** | **21** | | **14** | |

இலங்கையின் வேல்ட் விஷன் நிறுவனமும், பிரதேச மட்டத்திலான DPERP திட்டங்களை தயாரிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. அந்த நிறுவனத்தின் நிதி உதவியுடன் பிரதேச மட்டத்திலான பிரதேச DPERP திட்டங்கள் தயாரிப்பதற்காக 42 செயலமர்வுகள் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேச மட்டத்திலான பிரதேச DPERP 32 திட்டங்கள் அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் அது சம்பந்தமான விபரங்கள் அட்டவணை 5–2இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5-2: வேல்ட் விஷன் நிறுவனத்தின் நிதி உதவியுடன் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்**

| மாவட்டம் | ஆரம்ப செயலமர்வு | | இறுதி செயலமர்வு | | திட்டங்கள் அச்சிடல் |
|---|---|---|---|---|---|
| | செயலமர்வு எண்ணிக்கைகள் | பிரதேச செயலாளர் பிரிவுகள் | செயலமர்வுகளின் எண்ணிக்கை | பிரதேச செயலாளர் பிரிவுகள் | |
| கண்டி | 01 | கங்க இஹல கோறளை | 01 | | 01 |
| நுவரெலியா | | | | | 05 |
| பதுளை | | | 15 | சகல பிரதேச செயலாளர் பிரிவுகளும் | 15 |
| மாத்தளை | 01 | லக்கல | 01 | லக்கல | 01 |
| மொனறாகலை | | | 02 | பிபிலை வெல்லவாய | 02 |
| புத்தளம் | 02 | ஆனமடுவ, புத்தளம் | 02 | வென்னப்பபுவ, கற்பிட்டி | 02 |
| மட்டக்களப்பு | 04 | கோறளைப்பற்று ஏறாவூர் பற்று போரதீவு பற்று தெற்கு | 04 | கோறளைப்பற்று ஏறாவூர் பற்று போரதீவு பற்று தெற்கு | 04 |
| அம்பாறை | 02 | பதியதலாவ, பொத்துவில் | 02 | பதியதலாவ, பொத்துவில் | 02 |
| இரத்தினபுரி | 04 | இரத்தினபுரி பெல்மதுளை வெலிகம்பல இம்புல்வே | 01 | கஹவத்த | |
| **மொத்தம்** | **14** | | **28** | | **32** |

### 5.2.3 கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் (GN) முன்னாயத்த திட்டமிடல் அபிவிருத்தி

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளின் உதவி பணிப்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆளணியினர் கிராமிய மட்டத்திலான குழுக்களை நியமித்து அந்த குழு உறுப்பினர்களுக்காக சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அனர்த்த முகாமைத்துவ பணிகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்தலுக்கு பொறுப்பாக இருக்கின்றனர். மேலும் சமூக அடிப்படையிலான அனர்த்த வரைபடங்களை தயாரித்தல், வெளியேறிச் செல்வதற்கான வீதிகள், பாதுகாப்பான இடங்கள், முதலுதவிகளை இனங்காணுதல், உள்ளக ரீதியாக இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம் முகாமைத்துவம் மற்றும் அவற்றை தயார்படுத்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அனர்த்த முன்னெச்சரிக்கைகளை விடத்தல், அந்தக் குழுக்கு சைரன்கள், மழை அளவீட்டு மாணிகள், ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்குதல் என்பன இடம்பெற்றுள்ளன.

### 5.3 கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் ஒத்திகைகளை நடத்துதல்

வருடத்தில், மண்சரிவு, வெள்ளப்பெருக்கு மற்றும் சுனாமி ஏற்படக்கூடிய பிரதேசங்களில் கிராம உத்தியோகத்தர் மட்டத்தில் 117 ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன. அதுதொடர்பான விபரங்கள் அட்டவணை 5-3இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை **5-3:** மாவட்ட மட்டத்தில் உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளின் விபரங்கள்

| மாவட்டங்கள் | சுனாமி | மண்சரிவு | வெள்ளப்பெருக்கு |
|---|---|---|---|
| அம்பாறை | 08 | | |
| கொழும்பு | 07 | | |
| காலி | 08 | | |
| கம்பஹ | 08 | | |
| ஹம்பாந்தோட்டை | 08 | | |
| பதுளை | | 02 | |
| களுத்துறை | 08 | | 02 |
| கண்டி | | 02 | |
| மாத்தளை | | 01 | |
| நுவரெலியா | | 02 | |

| | | | |
|---|---|---|---|
| திருகோணமலை | 08 | | |
| மாத்தறை | 08 | | 02 |
| புத்தளம் | 09 | | |
| யாழ்ப்பாணம் | 08 | | |
| கிளிநொச்சி | 08 | | |
| மட்டக்களப்பு | 08 | | |
| மன்னார் | 09 | | |
| இரத்தினபுரி | | | 01 |
| **மொத்தம்** | **105** | **07** | **05** |





### 5.4 ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பாரிய தடுப்புச் சுவர்கள் தொடர்பாக முன்னாயத்த செயற்பாடுகள்

சூறாவளியின்போது, நில அதிர்வுகளின்போது தடுப்புச் சுவர்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை கருத்திற்கொண்டு நீர்ப்பாசன, நீரியல்வள முகாமைத்துவ அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள தடுப்பு சுவர் பாதுகாப்பு மற்றும் நீர்வள திட்டமிடல் கருத்திட்டத்தின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பாரிய தடுப்பு சுவர்களைக் கொண்ட ஆற்றின் தாழ்நிலப் பகுதிகளில் வாழும் முன்னாயத்த ஆற்றலை விருத்தி செய்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னின்று நடவடிக்கை எடுத்துள்ளது. ஆற்றின் கீழ் அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய மக்களுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் முன்னெச்சரிக்கை மற்றும் பகிர்ந்தளிக்கும் வழிமுறை மற்றும் அப்புறப்படுத்துவதற்கான பிரதேசங்களை வரைபடத்தில் உள்ளடக்குதல், சமிக்ஞை பலகைகளை பொருத்துதல், ஒத்திகை என்பன இதில் அடங்குகின்றன. 2012இல் நடாத்தப்பட்ட தடுப்புச் சுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு அட்டவணை 5-4இல் காட்டப்பட:டுள்ளன.

**அட்டவணை 5-4: மாவட்டங்களில் நடத்தப்பட்ட பாதுகாப்பு சுவர்களின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சுருக்கம்**

| மாவட்டம் | நீர்த்தேக்கம் / வாவியின் பெயர் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொலன்னறுவை | பராக்கிரம சமுத்திரம் | 12 |
| அநுராதபுரம் | ஈநச்சியாதீவு, கலாவாவி, ராஜஸ்கனை பதவிய, ஸ்ரீபுர, மஹகந்தராவ | 05 |
| ஹம்பாந்தோட்டை | லுணுகம்வெஹர நீர்த்தேக்கம் | 03 |
| கண்டி | கொத்மலை நீர்த்தேக்கம் | 04 |
| அம்பாறை | சேனாநாயக்க சமுத்திரம், வலக்கபிட்டி, நாஹிட்டன்வெளி | 03 |
| மாத்தளை | நாலந்த நீர்த்தேக்கம் | 02 |
| இரத்தினபுரி | சந்திரிகா வாவி | 01 |
| **மொத்தம்** | | **30** |

## 5.5 பாடசாலைக்கு வழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களும் பாடசாலை சுனாமி அப்புறப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும்

அனர்த்த முகாமைத்துவ நிலையம் அனர்த்தங்கள் இடம்பெறும் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட பாடசாலைகள் பாதுகாப்புத் திட்டங்களை தீட்டுவதற்கு GIZ மற்றும் கல்வி அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கியது. அதேபோன்று பாடசாலை மாணவர்களுடன் அப்புறப்படுத்துவதற்கான ஒத்திகைகள் இடம்பெற்றளவு கல்வித்துறையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் GIZ இதற்கான நிதியத்தை வழங்கியது.

இங்கு கீழ் காட்டப்படும் அட்டவணை 5-5 இன் ஊடாக மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் பாடசாலை பாதுகாப்புக்கான 17 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன. இதற்கு மேலதிகமாக GIZ நிதியத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவிகளின் மூலம் அனர்த்த முகாமைத்துவ மாவட்ட ஒருங்கிணைப்பு அலகுகளினால் நிகழ்ச்சித் திட்டங்கள் சில நடத்தப்பட்டன.



**அட்டவணை 5-5: பாடசாலை பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சுருக்கம் மாவட்ட அடிப்படையில்**

| மாவட்டம் | பாடசாலை | பாடசாலை பாதுகாப்பு |
|---|---|---|
| அம்பாறை | அம்பாறை கல்வி வலயம் | 01 |
| இரத்தினபுரி | பல்லேவெல்ல, எல்ல கல்லூரிகள், பலல்கொடை, இரத்தினபுரி கல்வி வலயம் 1 (ஆசிரியர்கள் 10) | 03 |
| காலி | காலி / சுகதானந்த கல்லூரி | 01 |
| கம்பஹ | புனித அந்தோனியார் ஆரம்ப பாடசாலை | 01 |
| ஹம்பாந்தோட்டை | ஹம்/சமோதகம கல்லூரி | 01 |
| கண்டி | தொடம்பல மஹாவித்தியாலயம் | 01 |
| கேகாலை | தோலங்கமுவ டட்லி சேனாநாயக்க கல்லூரி | 01 |
| குருநாகல் | குருநாகல் மாகாண கல்வி அலுவலகம் | 01 |
| மன்னார் | மன்னார் அல்.அஸ்சயா மகாவித்தியாலயம் | 01 |
| மாத்தளை | சிறிமாவோ பண்டாரநாயக்க மகாவித்தியாலயம் | 01 |
| யாழ்ப்பாணம் | யாழ்/உயரப்புலம் யாழ்/எலும்பய்த்தீவு மகாவித்தியாலயம் | 01 |
| வவுனியா | பூவரசக்குளம் மகாவித்தியாலயம் | 01 |
| திருகோணமலை | திருகோணமலை கல்வி வலயம் | 01 |
| மட்டக்களப்பு | மட்/களுதாவலை மகாவித்தியாலயம் | 01 |
| மாத்தறை | மாத்தறை வித்தியாலயம் | 01 |

| | | |
|---|---|---|
| புத்தளம் | ஆதிமுனை தமிழ் பாடசாலை | 01 |
| நுவரெலியா | நுவ/உயர் மகளிர் வித்தியாலயம் | 01 |
| பதுளை | கொஸ்லந்த தேசிய பாடசாலை | 01 |
| **மொத்தம்** | | **20** |

## 5.6 பிரதேச பிரிவு அடிப்படையில் குழுக்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விசேட அறிவூட்டல்

முன் ஆயத்த திட்டமிடல் பிரிவினால் பிரிவு அடிப்படையில் இலக்காகக் கொள்ளப்பட்ட விசேட குழுக்களுக்காக அனர்த்த சம்மேளனங்களை தடுத்தல், முன் ஆயத்தம் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. பிரிவுகள் அடிப்படையில் மக்களுக்கு புகட்டுவதற்காக பிரிவு அடிப்படையில் 16 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. அட்டவணை 5-6 மூலம் அந்தந்த மாவட்டங்களின் இலக்கு குழுக்களுக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன. இலக்குவைக்கப்பட்ட குழுக்களில் வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள், பொலிசார் ஆகியோரும் அடங்குகின்றனர்.



**அட்டவணை 5-6: மாவட்டங்களில் நடத்தப்பட்ட அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

| மாவட்டம் | நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை | இலக்கு குழுக்கள் |
|---|---|---|
| கிளிநொச்சி | 01 | கிராம உத்தியோகத்தர் பிரிவு குழுக்கள் |
| வவுனியா | 01 | மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் வவுனியா கச்சேரி |
| மட்டக்களப்பு | 01 | பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் |
| புத்தளம் | 01 | பாடசாலை அதிபர்கள் |
| மொனறாகலை | 01 | மொனறாகலை மாவட்ட செயலகத்தில் பயிற்சி பெறும் உத்தியோகத்தர்கள் |
| மட்டக்களப்பு | 01 | கிராம உத்தியோகத்தர் பிரிவு குழு உறுப்பினர்கள் |
| பொலன்னறுவை | 02 | மாவட்ட செயலகங்களில் பயிற்சி பெறும் பட்டதாரிகள் |
| குருநாகல் | 01 | முப்படையினர் மற்றும் பொலிசார் |
| இரத்தினபுரி | 01 | குருவிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள் |
| கேகாலை | 01 | பயிற்சிபெறும் பட்டதாரிகளுக்கான அறிவூட்டல் |
| மாத்தளை | 01 | கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில் வெளிக்கள உத்தியோகத்தர்களும் வேறு உத்தியோகத்தர்களும் |
| பதுளை | 01 | ஹல்துமுல்ல பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் |
| நுவரெலியா | 01 | வலபனை பிரதேச செயலகப் பிரிவில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிகக்ள உத்தியோகத்தர்கள் |
| கண்டி | 01 | பல்லேகல பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் |
| ஹம்பாந்தோட்டை | 01 | நிருவாக உத்தியோகத்தர்களுக்கான அறிவூட்டல் |
| மாத்தறை | 01 | மாவட்ட செயலகப் பிரிவில் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு |
| **மொத்தம்** | **16** | |

### 5.7 டிபெகோ (DiPECO) கருத்திட்டத்தின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் திட்டம்

டிபெகோ (DiPECO) கருத்திட்டம் மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் அந்த மாவட்டங்களில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினதும் ஆற்றலை விருத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், அனர்த்த முன்னாயத்த திட்டமிடல், அனர்த்தங்கள் தொடர்பான

வரைபடங்களை தயாரித்தல் மற்றும் அனர்த்தங்களை சமூகமட்டத்தில் நீக்குதல் ஒத்திகைகள் என்பன இவற்றுள் அடங்குகின்றன. இதற்கு மேலதிகமாக பிரிவு அடிப்படையில் முன்னாயத்தம் திட்டமிடல் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வழிகாட்டலின் கீழ் செயல்முறை ரீதியிலான செயற்பாடுகளாக ஒக்ஸ்பாம் ஜி.பி. மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஐரோப்பிய ஒன்றியம் இதற்கான நிதி உதவிகளை வழங்கியது.

## 6 சமூகத்தை விழிப்புணர்வூட்டும் பிரிவின் பணிப்பாளர் அறிக்கை

### 6.1 அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவின் உள்ளக ஆளணியினருக்கு அரச நிறுவனங்களுக்கு அனர்த்த தாக்கத்தை எதிர்நோக்கும் சமூகத்துக்கு, அரச சார்பற்ற பங்காளி நிறுவனங்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தும் பொறுப்பினை ஏற்றுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பெரும்பாலான நிகழ்ச்சித் திட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### 6.2 மாகாண, மாவட்ட, பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள்

#### 6.2.1 பிரதேச அதிகார சபைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் (LA)

காலி, இரத்தினபுரி, பொலன்னறுவை, புத்தளம், முல்லைத்தீவு, பதுளை, கம்பஹ, மாத்தளை, அம்பாறை, திருகோணமலை மற்றும் கெகாலை மாவட்டங்களிலுள்ள பிரதேச அதிகாரசபை உறுப்பினர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. பிரதேச அஅதிகார சபைகளின் உறுப்பினர்களுக்கு இடையிலான ஆற்றலை விருத்தி என்பன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் என்பன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

#### 6.2.2. பங்காளி தரப்பினரின் ஆற்றல்விருத்தி

பின்வரும் 6-1வது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு 10 மாவட்டங்களில் பொலிஸ் மற்றும் இராணுவம் அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன.

**அட்டவணை 6-1: பொலிஸ், இராணுவம் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி நெறிகள்**

| இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | இடம் / மாவட்டம் |
|---|---|---|
| 01 | பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி | பதுளை / புத்தளம் |
| 02 | இராணுவ உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி | பதுளை / மாத்தளை / அநுராதபுரம் |
| 03 | அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி | பொலன்னறுவை / முல்லைத்தீவு / கேகாலை / புத்தளம் / மாத்தளை |





### 6.2.3 இடம்பெயர் பயிற்சி வாகனம் மூலம் மக்களுக்கு அறிவூட்டல்

பொதுமக்களுக்கிடையில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அறிவூட்டுவதற்காக அனா்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடம்பெயர் வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு அமைவாக 2012இல் கேகாலை, அநுராதபுரம், மட்டக்களப்பு, கண்டி, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர் வாகனத்தைப் பயன்படுத்தி அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 6.2.4 இடிமின்னல், மண்சரிவு, நில அதிர்வுகளினால் ஏற்படும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டல்

பின்வரும் 8-2 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் இடிமின்னல் மற்றும் மண்சரிவு தொடர்பாக 9 மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் மற்றும் பாடசாலை மட்டத்தில் விசேட அறிவூட்டல் 26 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இடிமின்னல், மண்சரிவு, நில அதிர்வு தொடர்பாக அறிவினை மேம்படுத்தல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

**அட்டவணை 6-2: அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்பட்ட இடிமின்னல் மற்றும் நில அதிர்வு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்**

| மாவட்டம் | மாவட்ட அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் | பிரிவுகள் அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்கள் | பாடசாலை அமட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்கள் ஆசிரியர்கள் மற்றும மாணவர்களுக்காக |
|---|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | 01 | 01 | 01 |
| பதுளை | 01 | 01 | 01 |
| நுவரெலியா | 01 | 01 | 03 |
| கண்டி | 01 | 01 | 02 |
| கம்பஹு | 01 | 01 | - |
| கேகாலை | 01 | 01 | - |
| இரத்தினபுரி | 01 | 05 | 02 |
| அநுராதபுரம் | 01 | 06 | 02 |
| மட்டக்களப்பு | 01 | 01 | 02 |




இடிமின்னல், மண்சரிவு, நில அதிர்வுகள் தொடர்பாக விளக்கமூட்டம் நிகழ்ச்சித்திட்டங்கள்

### 6.2.5 பாடசாலை அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுக்களை ஏற்படுத்தல்

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் பதுளை மாவட்டத்தில் 10 பாடசாலைகளிலும், கொழும்பு மாவட்டத்தில் 05 பாடசாலைகளிலும் மாத்தறை மாவட்டத்தில் 05 பாடசாலைகளிலும் பாடசாலை அனர்த்த தொண்டர் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அனர்த்த முகாமைத்துவம் மற்றும் முதலுதவிகள் தொடர்பாக சிறுவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சி வழங்கப்பட்டது. அனைத்து குழுக்களினதும் 25 சிறுவர்கள் வீதம்

உள்ளடங்கியிருந்தனர் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியம் UNDP இன் கீழ் இதற்கான நிதி கிடைத்தது.



பாடசாலை, அனர்த்த தொண்டர் அணிகளை ஏற்படுத்தல் குழு அங்கத்தவர்களுக்கு பாடசாலை பைகள் வழங்குதல்.

### 6.2.6 தேசிய அபிவிருத்தி திட்டத்தில் அனர்த்த குறைப்பு கட்டமைப்பினையும் உள்வாங்குதல்.

தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சின் பதவியணியினர் 32 பேருக்கு இரண்டு நாள் வதிவிடக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அனர்த்த ஆபத்துக் குறைப்பினை நாட்டின் பிரதான அபிவிருத்தி நீரோட்டத்தில் சேர்ப்பது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி அனுசரணை வழங்கியது.

## 6.3 மாவட்ட அனர்த்த முகாமைத்துவக்குழு அங்கத்தவர்களின் ஆற்றலை விருத்தி செய்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் UNDP மற்றும் UNOCHAயின் உதவியுடன் 4 மாவட்டங்களில் இரண்டு நாள் அவசர பதில் நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளுக்கான ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அவர்கள் மத்தியில் உள்ள அறிவினை மேம்படுத்தலும் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுதலும் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக அட்டவணை 6.3இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 6-3: உடனடி பதில் நடவடிக்கைகள் மற்றும் அவற்றினை ஒருங்கிணைப்பது தொடர்பாக மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

| இல | இடம் / மாவட்டம் | கலந்து கொண்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வவுனியா | 29 |
| 2 | முல்லைத்தீவு | 29 |
| 3 | மன்னார் | 38 |
| 4 | யாழ்ப்பாணம் | 32 |

நுவரெலியா மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ குழு உத்தியோகத்தர்களுக்காக அவர்களது உள்ளக நிறுவனங்களை ஒருங்கிணைத்தலை மேம்படுத்துவதன் மூலம் பதில் நடவடிக்கைகளுக்கான ஆற்றலை மேம்படுத்துவதற்காக மூன்று நடைமுறை ரீதியிலான பயிற்சி நெறித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதற்காக JICA (DiMCEP) கருத்திட்டத்தின் உதவி கிடைத்தது.

## 6.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணியினர் மற்றும் பங்காளி பிரதிநிதிகளின் ஆற்றல் அபிவிருத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்காளி நிறுவனங்களுக்கிடையில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் மற்றும் அதற்காக இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டன. முன்னெச்சரிக்கை அடிப்படையில் முன்கூட்டியே ஆயத்தமாவதற்காக அதன் முதலாவது செயலமர்வு நடத்தப்பட்டதுடன் அனர்த்த பாதிப்பு குறைத்தல், D.R.R. தொடர்பான செயற்பாடுகள் அதன் இரண்டாவது செயலமர்வில் உள்ளடக்கப்பட்டன. இந்த செயலமர்வுகளுக்கு ஜய்கா மற்றும் JICA (DiMCEP) நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கின.

அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியணியினர் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் பதவியணியினருக்காக கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பான இரண்டு பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன. பதவியணியினரின் கருத்திட்ட முகாமைத்துவம் தொடர்பாக உள்ள அறிவினை மேம்படுத்துவது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவனத்தில் 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. 2012 நவம்பர் மாதம் 29ஆந் திகதி தொடக்கம் டிசெம்பர் 01ஆந் திகதிவரை மதலாவது பயிற்சிநெறி நடத்தப்பட்டதுடன் டிசெம்பர் 06ஆந் திகதி தொடக்கம் 08ஆந் திகதிவரை இதன் இரண்டாவது பயிற்சிநெறி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக UNDP நிதி உதவிகளை வழங்கியது.

மாவட்ட உதவிப்பணிப்பாளர்களுக்காக மாவட்ட அனர்த்த முன்னாயத்தம் மற்றும் உடனடி பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் மீள் ஒழுங்கமைத்தல் (DPERPs) தொடர்பாக ஒரு நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது. மாவட்டங்களில் முன்னாயத்தம் மற்றும் அவசர பதில் நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் (DPERPs) மீள் ஒருங்கமைத்தல் என்பன இந்த செயலமர்வின் நோக்கமாகும். இந்த செயலமர்வினை நடத்துவதற்காக JICA (DiMCEP) கருத்திட்டம் ஒத்துழைப்பு வழங்கியது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிவாரண சேவைகள் நிலையத்தின் ஆளணியினருக்காக (NDRSC) இரண்டு நாள் பயிற்சி பட்டறையொன்று நடத்தப்பட்டது. துராபா செய்மதி தொலைபேசி தொடர்பாக பயிற்சியளிப்பது மாவட்ட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்காக அனர்த்த பதில் நடவடிக்கைகளுக்கான ஆற்றல் மேம்பாட்டு கருத்திட்டம் ஒத்துழைப்பு வழங்கியது. அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியணியினர் மற்றும் பதவியணி ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு நாள் பயிற்சி பட்டறையொன்று நடத்தப்பட்டது. அலுவலக செயற்பாடுகள் மற்றும் கோப்பு கட்டமைப்பு தொடர்பாக இங்கு பயிற்சி வழங்கப்பட்டது.

## 6.5 அச்சிடும் உபகரணங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையம், பயிற்சி மற்றும் அறிவூட்டும் பிரிவு பொதுமக்கள், குறிப்பிட்ட பங்காளி நிறுவனங்கள், பாடசாலை பிள்ளைகளுக்கிடையில் அறிவூட்டல் மற்றும் செயல் ஊக்கங்கள் தொடர்பான துண்டு பரச்சாரங்கள், வழிகாட்டி நூல்கள், கையேடுகள் போன்றவற்றை அச்சிடும் பொறுப்புக்கள் ஏற்படும். தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சி மற்றும் ஏனைய மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்களின்போது 50,000 துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

## 6.6 ஊடக செயலமர்வுகளும் ஊடக சந்திப்புக்களும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் முறைகள் தொடர்பாக முகாமைத்துவத்தின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஆ) கூட்டிணைந்த திட்டம்
(இ) முன் ஆயத்த திட்டங்கள் தயாரித்தல்
(ஈ) பதவியணியினர் நிர்வாகம்
(உ) செயலாற்றல்

எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,

306/72,

பத்தரமுல்ல

**அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

மேற்படி விடயம் தொடர்பாக தாங்கள் டீஈ/ஜீ/டீஎம்சீ/எப்ஏ/ இலக்க 2012 மற்றும்2013 செப்தம்பர் மாதம் 17 ஆம் திகதிய கடிதத்துடன் தொடர்புடையது. அதற்கேற்புடையதான விளக்கமளிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன..

**2. நிதிக் கூற்றுகள்**

**2.2 நிதிக் கூற்றுகள் தொடர்பான கருத்துரைப்புகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைப்பாடுகள்**

(அ) இணங்குகின்றோம்.

ஏற்புடைய கருத்திட்டத்தின் கீழ் மத்திய நிலையத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ள சகல ஆதனங்கள் தொடர்பான தகவல்கள் நிதிப் பிரிவிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டு இது வரை கணக்கு வைக்கப்படாத சகல ஆதனங்களையும் 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் சேர்ப்பதற்கும் பெறுமதிகள் கூடிக் குறைத்து பதியப்பட்டுள்ள ஆதனங்கள் தொடர்பாக ஆராயந்துப் பாரத்து அவற்றை சீராக்குவதற்கு ஏற்புடைய அலுவலர்கள் அறிவுறத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன..

(ஆ) இணங்குகின்றோம்.

ஏற்புடைய நீர் பவுசர் மற்றும் பெகோ இயந்திரம் 2013 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதத்திலிருந்து நிலையான ஆதன ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டது.

(இ)

இணங்க முடியாது .

திறைசேரி அளிப்பின கீழ் மத்திய நிலையத்திற்கு 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்றுள்ள 3 வாகனங்களின் முறைகள் ஊஜ இன் பெறுமதி ரூ . 1,975,000/- சீராக்கல் குறிப்புகள் இல 14 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது . ஏற்புடைய சீராக்கலை சரியாக குறிப்பு 15 இன் கீழ் குறித்து வைப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன .

(ஈ) செலவு பேரேட்டுக்கும் நிதிக் கூற்றுகளுக்கும் இடையிலான வித்தியாசங்கள்

| செலவு விடய விபரம் | நிதிக் கூற்றுகளுக்கு அமைய நிலுவைகள் (ரூ.) | பேரேட்டுக்கு அமைய நிலுவைகள் (ரூ.) | வித்தியாசம் அதிகரிப்பு/(குறைதல்) (ரூ.) | வித்தியாசங்களுக்கான பதில்கள் |
|---|---|---|---|---|
| அனர்த்தங்களை குறைக்கும் பொருட்டு மாவட்டங்களுக்கான கருத்திட்டங்கள் | 51,649,080.00 | 32,171,012.00 | 19,478,067.00 | இணங்க முடியாது. நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவை பொது பேரேடு மற்றும் செலவு பேரேட்டுடன் ஒத்துப்போகின்றது |
| முன் ஆயத்த திட்டங்களுக்கு | 4,613,499.00 | 4,830,185.00 | (216,686.00) | இணங்க முடியாது. நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவை பொது பேரேடு மற்றும் செலவு பேரேட்டுடன் ஒத்துப்போகின்றது . |
| நுவரஎலிய, கண்டி, மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களில் மண் சரிவுகளை குறைப்பதற்கு தேவையான வேலைத்திட்டங்களுக்கான நிதி | 49,500,000.00 | 54,500,000.00 | (5,000,000.00) | நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள நிலுவை பொது பேரேடு மற்றும் செலவு பேரேட்டுடன் ஒத்துப்போகின்ற அதேவேளை, செலவு பேரேட்டில் 5 மி. ரூ தொகையொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பதிவதில் குறைப்பாடு காணப்பட்டதோடு பிறகு அது சீராக்கப்பட்டது . |
| அம்பாறை, மட்டக்களப்பு, பொலனறுவை, மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கை குறைத்தல் | 142,044.00 | - | 142,044.00 | இணங்குகின்றோம் நிதி ஏட்டிலும் பொது பேரேட்டிலும் சரியாக பதியப்பட்டுள்ள அதேவேளை, செலவு பேரேட்டில் குறிக்க தவறியுள்ள காணத்தினால் ஏற்புடைய சீராக்கல்கள் பின்னர் மேற்கொள்ளப்பட்டன. |
| இதர மூலதன கருத்திட்டங்கள் | - | 36,555.00 | (36,555.00) | ஏற்புடைய செலவானது, நிலையான ஆதனங்களை கையகப்படுத்துவதற்காக செய்யப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படித் தொகை நிலையான ஆதனங்களின் கீழ் நிதிக் கூற்றுகளில் பதியப் பட்டுள்ளது. |
| நுவரஎலிய கெரடி அல்ல கருத்திட்டம் | 11,829,000.00 | 14,829,000.00 | (3,000,000.00) | இணங்க முடியாது. செலவு பேரேடு, பொதுப் பேரேடு மற்றும் நிதிக் கூற்றுகளின் நிலுவைகளில் எவ்வித வித்தியாசங்களும் காணப்படவில்லை. |
| தம்புள்ளவில் வெள்ளப்பெருக்கு நிலைமையை குறைத்தல் | - | 16,500,000.00 | (16,500,000.00) | இணங்க முடியாது. 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் செலவாக எந்தவித தொகையும் காட்டப்படவில்லை.. 2012 ஆம் ஆண்டில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கருத்திட்டத்துக்காக செலுத்தப்பட்ட 12.5 மி ரூ தொகை மீளவும் நிறுவனத்துக்கு பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளது. ஆகவே, நிதிக் கூற்றுகள் மற்றும் பேரேடுகளுக்கிடையே வித்தியாசம் காணப்படவில்லை.. |

## 2.2.2 கணக்காய்வுக்கு சான்றுகள் இல்லாமை .

| விடயம் | பெறுமதி (ரூ.) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | பதில்கள் |
|---|---|---|---|
| முகாமைத்துவ தொடர்புசாதன கருத்திட்டம்<br>i கடன் முதலீடுகள் திறைசேரி வெளிநாட்டு உதவிகள் | 471,681,737.00<br>701,378,183.00 | கருத்திட்ட உடன்படிக்கை, கருத்திட்ட பெறுமதி | இணங்குகின்றோம்.<br>ஏற்புடைய கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்துக்கான பெறுமதி யூரோ 6,600,000/- என்பதோடு கருத்திட்ட காலம் 2 வருடங்களாகும்.. நெலர்லாந்து ரொபோ பாங்க் இன்டர்நெசனல் நிறுவனத்தினால் 4,500,00/-யூரோ தொகையும் இலங்கை அரசாங்கத்தினால் 2,100,000/- யூரோ தொகையும் என இக்கருத்திட்டத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது..<br>அடிப்படை உடன்படிக்கைக்கமைய 2010 ஆம் ஆண்டில் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது.. |
| மை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகள் | 44,259,006.00<br>279,593,255.00 | 03 ஆண்டுகள் இந் நிலுவை நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் | கருத்திட்ட ஒப்பந்தம் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் |

| | | | |
|---|---|---|---|
| கடன் முதலீடுகள் திறைசேரி வெளிநாட்டு உதவிகள் | | இப் பணிகள் தொடர்பான விபரங்கள் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கடன் முதலீடுகளாக. 323,852,262/- தொகை பெறுமதியொன்று 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு ஆண்டு வரையும் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. . | மாதம் 21 ஆம் திகதியன்று கணக்காய்வு பிரிவுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.. இணங்குகின்றோம். கணக்குகளில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் கடன் முதலீடுகளாக 2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை வருடாந்த கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 352,262/- தொகை 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.. |

### 2.2.3 சட்ட, திட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை

(அ) 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் 17 ஆவது உறுப்புரைக்கமைய நிதியமொன்றை தாபிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய பேரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாத காரணத்தினால் புதிய சட்ட திருத்தத்தின் போது இந்த உறுப்புரை நீக்கப்பட்டது.

**(ஆ) நிதி ஒழுங்குவிதிகள்**

(i) நி..ஒ.104 - இழப்புகள் தொடர்பான ஆரம்ப அறிக்கை

இணங்குகின்றோம்

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 10 வாகனங்கள் மீளாய்வு ஆண்டினுள் விபத்துக்குள்ளான அதேவேளை, அவற்றில் 02 வாகனங்களின் நி ஒ 104(03) இழப்புகள் தொடர்பான ஆரம்ப அறிக்கையின் கணக்காய்வு தலைமை அதிபதியின் பிரதி அரச கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய 08 வாகனங்களினதும் மேற்படி அறிக்கைகள் 2013.10.15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டு 2013 ஆம் ஆணடில் அதனை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

**(ii) நி ஓ 110ரீ சேத ஆவணம்**

இணங்குகின்றோம்

இன்றளவில் சேத ஆவணமொன்று பேணப்பட்டு வருகின்றது

**(iii) நி ஓ 267 மற்றும் 267 (2)**

இணங்குகின்றோம்

நி. ஓ. 267 மற்றும் 267 (2) இன் பிரகாரம் தொழிற்படும் செயற்பாடு 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. எமது நிறுவனத்தின் மாவட்ட அலுவலக அலுவலர்களின் சம்பள பெறுகைகள் உறுதிப்படுத்தப்பட்டு மாதாந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தலைமை அலுவலக அலுவலர்களிடமிருந்து சம்பள ஆவணத்தில் கையொப்பம் பெறும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது..

**(iv) நி ஓ 753 (1)**

இணங்க முடியாது .

பொருள் விநியோகிக்கும் செயற்பாட்டின் போது பொது 141 படிவமும் பொது 219 ஆம் படிவமும் பயன் படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சில சந்தர்ப்பங்களில் ஏற்புடைய படிவங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கலில்லை. அதன் காரணமாக ஏற்புடைய படிவங்களை உரிய முறையில் எல்லா சந்தர்ப்பங்களின் போதும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு களஞ்சியப் பொறுப்பாளரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய முறையில் அப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(v) நி. ஓ 754**

இணங்குகின்றோம் .

கையிருப்பு பேரேடுகளை உரிய முறையில் பேணப்படுதல் மற்றும் களஞ்சிய நிருவாகத்தை உரிய முறையில் முன்னெடுத்துச் செல்வதற்கு களஞ்சியப் பொறுப்பாளர் அறிவுறுத்தப்பட்டு அதற்கான பயிற்சிகளை அளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆகவே, 2013 ஆம் ஆண்டில் உரிய முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயிற்சி அளித்தல் .

**(vi) நி ஒ 757 (1) மற்றும் 757(2) - (i),(ii)**

இணங்குகின்றோம்

பொருள் ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக முறையான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதோடு பொருள் ஆய்வு உள்ளடங்களாக கையிருப்பு நிருவாகம் தொடர்பான விேட பயிற்சியொன்றை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அலுவலர்களுக்கு 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதியன்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் வழங்கப்பட்டுள்ளது.. மேலும் , 2012 ஆம் ஆண்டின் பொருள் ஆய்வு நடவடிக்கைகள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை, அறிக்கையிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் மற்றும் மிகை தொடர்பாகவும் ஆராய்ந்து பார்த்து ஏடுகள் இற்றைப்படுத்தப் பட்டுள்ளன. ஆதற்கு ஏற்புடைய அறிக்கை 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆமு் திகதி அன்று கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. .

(vii) நி . ஒ 1646 □ (i),(ii)

இணங்குகின்றோம்

இம் மத்திய நிலையத்துக்கு சொந்தமான 36 வாகனங்களில் கீழே சொல்லப்பட்டுள்ளவாறு அனர்த்த நிலைமைகளின் போது பாவிக்கக் கூடிய வகையில் வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் ஓட்ட குறிப்புகளை தவிர இதர அனைத்து வாகனங்களினதும் ஓட்ட குறிப்புகள் அரச கணக்காய்வு பிரிவிற்கு அனுப்புவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் சில மாவட்டங்கள் தமக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களின் ஓட்ட குறிப்புகளை அனுப்பும் பணி பல்வேறு காரணங்களால் தாமதமடைந்த காரணத்தினால் மேற்படி ஓட்ட குறிப்புகளை ஆனுப்புவதில் தாமதம் ஏற்படலானது .

1. ஸ்ரீ டுபு 2045
2. ஸ்ரீ சுளு 1586

இவ் வாகனங்களை கடமையில் ஈடுபடுத்தும் பொருட்டு எரிபொருள் வழங்குவது தொடர்பாக இம் மத்திய நிலையத்திற்கு எவ்வித தொடர்பும் இல்லை என்பதால் அவற்றின் ஓட்ட குறிப்புகள் எமது மத்திய நிலையத்திற்கு அனுப்பப்படுவதில்லை. எவ்வாறாயினும் அவற்றின் ஓட்ட குறிப்புகளை மேற்படி

நிறுவனத்தினால் ஏற்புடைய நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் மாதாந்தம் அரச கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது..

**(viii) நி.ஒ 1647(ஆ)**

இணங்குகின்றோம் .

நி.ஒ 1647(ஆ) இன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டுக்கு மத்திய நிலையத்தின் வாகனங்கள் தொடர்பாக அவற்றின் உபகரணங்கள் பற்றிய ஆய்வு 2013 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 15 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டது. ஏற்புடைய அறிக்கை 2013 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 14 ஆம் திகதியன்று அரசாங்க கணக்காய்வுப் பிரிவுக்கு அனுப்பபட்டது..

(இ) (i) இணங்குகின்றோம்

ஏற்புடைய அறிக்கையின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் பூர்த்தி செய்யப்படாத நிலைமை காணப்படட்தால் சமர்ப்பிக்க முடியவில்லை..

(ii) 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை 2013 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 29 ஆம் திகதியன்று பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இணங்குகின்றோம் .

வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு பின்னர் அலுவலர்களினால் ஏற்புடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, மேற்படி அறிக்கைகள் தனித் தனியாக கோப்புகளில் வைக்கப் படாதிருந்த போதிலும் மேற்படி அறிக்கைகளை இதர அலுவலர்களுக்கு வாசிப்பதற்கு வசதியாக வளங்கள் மத்திய நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது . எவ்வாறாயினும் கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து வெளிநாட்டு பயணங்களுடன் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் அந்தந்த அலுவலர்களின் வெளிநாட்டு பயண கோப்புகளில் உள்ளடக்குவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் , இன்றளவில் வெளிநாட்டு பயணங்களில் ஈடுபட்டுள்ள சகல அலுவலர்களும் ஏற்புடைய அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளார்கள்..

**(உ) வாகனங்களின் எரிபொருள் ஒப்பீட்டு பரிசோதனை மேற்கொள்ளப்படல்**

இணங்குகின்றோம்

மத்திய நிலையத்துக்கு சொந்தமான வாகனங்களில் 11 வாகனங்கள் 2013 ஆம் ஆண்டிலும், 12 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டு நொவம்பர் மாத்திலும் , 04 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் காலாண்டிலும் மற்றும் மேலும் ஒரு வாகனம் 2011 ஆம் ஆண்டின் நொவம்பர் மாத்திலுமாக மொத்தம் 28 வாகனங்களில் எரிபொருள் ஒப்பீட்டு பரிசேதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய 08 வாகனங்களில் 02 வாகனங்கள் மேற் சொன்னவாறு அற்றைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் என்பதோடு எஞ்சிய 06 வாகனங்கள் தலைமை அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.. இந்த 06 வாகனங்களினதும் எரிபொருள் ஒப்பீட்டு பரிசோதனையை மேற்கொள்ளும் பணியை மோட்டார் வாகன திணைக்கள மோட்டார் வாகன பரிசோதனை அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் அதனை மேற்கொள்வதற்கு அலுவலர்கள் இல்லை என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, ஆகவே, பதவி நிலை அலுவலரொருவரின் மேற்பார்வையின் கீழ் அதனை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படி அறிவுத்தல்களுக்கு அமைய மிக துரிதமாக இப் பணி நடாத்தி முடிக்கப்படும்..

மத்திய நிலையத்தின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள 34 வாகனங்களின் எரிபொருள் ஒப்பீட்டு பரிசோதனைகளை 2014 ஆம் ஆண்டிலிருந்து முதலாவது காலாண்டில் நடத்தி முடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்புடைய அலுவவர்கள் அறிவுறுத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டில் அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

## 04 தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 அனர்த்தங்களின் மூலமான ஆபத்துக்களை குறைக்கும் கருத்திட்டங்கள்

(அ) (i) இணங்குகின்றோம்

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ரூ மில்லியன் 36.85 தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அதிக மழை மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்த நிலைமைகளின் கீழ் 07 கருத்திட்டங்களை 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய முடியாது போன அதேவேளை, 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கிரம ஓய கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு 60 மில்லியன் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையொன்று கரையோர பாதுகாப்பு திணைக்களத்தை முன்னிலைப் படுத்திய கருத்திட்டத்துக்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.. அதன் பிரகாரம் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது . கருத்திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு கள ஆய்வை மேற்கொள்கையில் ஏற்புடைய பிரதேசத்தின் காணி தொடர்பான சிக்கலான நிலைமையொன்று ஏற்பட்ட அதேவேளை, அதன் காரணமாக உள்ளூர் அரசியல் தலைமை மற்றும் உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்களை இணைத்துக் கொண்டு கூட்டமொன்று நடாத்தப்பட்டது.. அதன் போது உள்ளூராட்சி நிறுவனமானது கிரம ஓய கேபியன் அணையுடன் சார்ந்ததாக சுமார் 10 அடி வீதியொன்றை நிர்மாணிப்பதற்கு தேவையான காணியை பெற்றுக் கொடுப்பதற்கு காணி உரிமையாளர்களின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டு அதன் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.. ஆனால், வருடம் நிறைவு பெறும் தருணத்திலும் மேற்படி ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதி கிடைக்கப் பெறாத காரணத்தினால் கருத்திட்டத்தை அவ் வருடத்தினுள் ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனது. .

(ii) வவுனியா மாவட்டத்தில் வறட்சி நிமைமையை குறைக்கும் பொருட்டு 2012 ஆம் ஆண்டில் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, பணம் செலுத்துவதற்கு ஏற்புடைய ரிக்வி'ன் பத்திரங்கள் வவுனியா மாவட்டச் செயலக அலுவலகத்தின் மூலம் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. .

(iii) யாழ்ப்பாண மாவட்டத்தில் ,

1.யாழ்ப்பாணத்தில் வெள்ளப்பெருக்கை குறைத்தல் ரூ. 120,000,000.00

2 நெடுந்தீவு பிரதேசத்தில் நீரை வெளியேற்றும் மதகு நிர்மாணம் - ரூ. 500,000.00

3.பொட்டபானி ஆறு சார்ந்த வரம்பு புனரமைப்பு

மற்றும் மதகு நிர்மாணித்தல் - ரூ. 8,000,000.00

4.தென்மராச்சி பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கை

தடுப்பதற்கான மதகுகள் நிர்மாணம் ரூ. 6,000,000.00

மேற்படி கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உத்தேச இல 01 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டத்தை 03 ஆண்டுகளுக்குள் செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.. மேற்படி கருத்திட்டத்துக்காக 2012 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட தொகை 18.20 மில்லியன் ரூபாய் ஆகும். ஆனால் அதற்கு திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற தொகை 12 மில்லியன் ரூபாய் மாத்திரமே ஆகும். அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட பணிகளுக்கான செலுத்துகைகள் 2013 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. இலக்கம் 2,3 மற்றும் 4 மூலம் காட்டப்பட்டுள்ள கருத்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு செலுத்தியும் முடிக்கப்பட்டது. .

(iv) இக்கருத்திட்டத்துக்கு செலுத்துவதற்காக ரூ மில்லியன் 12.5 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் கருத்திட்டத்தை செயற்படுத்துகையில் அப்புறப் படுத்தப்பட்ட மணல் மற்றும் மண், வெட்டப்பட்ட மரங்கள் தொடர்பாக சனாதிபதி விசாரணைப் பிரிவின் மூலம் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்புடைய செலுத்துகை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது போனதால் மேற்படித் தொகையை மீளப் பெற்றுக்கொண்டு இதர கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டது.

**(v)** (i) இணங்குகின்றோம்

மன்னார் மழை நீர் பயிர்ச் செய்கை அபிவிருத்தி கருத்திட்டத்துக்கு 3.36 மில்லியன் ரூபாய் முற்பணமாக வழங்கப்பட்டிருந்த அதேவேளை, மேற்படித் தொகைக்கு ஏற்புடையதாக மதகுகள் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த அதேவேளை, மேற்படி வருடத்தில் திறைசேரியிடமிருந்து பணம் கிடைக்கப் பெறாத காரணத்தினால் கருத்திட்டத்திற்கு நிதி அளிப்பதில் தாமதம் ஏற்பட்டதால் கருத்திட்ட பணிகளை 2013 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. .

(ii) (iii) இணங்குகின்றோம்.

அனுராதபுரம் மற்றும் குருணாகல் எலங்கா கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான கருத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு ஏற்புடைய செலுத்துகைகளும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. .

(iv) இணங்குகின்றோம்

மாத்தறை ஆற்றில் முதலைக் கூண்டுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டமானது , 2012 ஆம் ஆண்டில் நில்வலா ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்து காணப்பட்டதால் நிறைவு செய்ய முடியாமல் போனது. மேற்படிக் கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது. .

(vi)

- ❖ 2013 ஆம் ஆண்டுக்கான நிதி நேரடியாக தேசிய கட்டட ஆராய்ச்சிகள் அமைப்புக்கு வழங்குவதற்கு மேற்கொள்ளப்படடிருந்த தீர்மானத்துக்கு அமைய ஒரே அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனம் என்பதை கருத்தில் கொண்டு ஏற்புடைய தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது .

- ❖ தேசிய கட்டட ஆராய்ச்சிகள் அமைப்பின் கரண்டி அல்ல கருத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவினத் தலைப்பிலிருந்து 11,829 மில்லியன் ரூபாய் தொகையும் தேசிய கட்டட ஆராய்ச்சிகள் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற கண்டி, பதுளை, மற்றும் நுவரஎலிய ஆகிய மாவட்டங்களில் மலைத் தொடர்கள இடிந்து விழும் பிரதேசங்கள் /நிலப்பகுதி போன்ற மண்சரிவு அபாயங்கள் அதிகமாக காணப்படும் வளைவுகளில் சேதங்களை குறைத்தல் மற்றும் கல் வேலி இட்டு நிலையான முறையில்

அமைக்கும் கருத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவினத் தலைப்பின் நிதியிலிருந்து அவசர தேவை கருதி 3 மில்லியன் ரூபாய் தொகையுமாக மொத்தமாக 14.829 மில்லியன் ரூபாய் தொகை கரன்டிஅல்ல கருத்திட்டத்துக்காக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் தேசிய கட்டட ஆராய்ச்சிகள் அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது..

### 4.1.2 முன் ஆயத்த திட்டங்களை வகுத்தல்

(அ) 2012 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டமானது குறித்த ஆண்டில் திறைசேரியினால் முன் ஆயத்த பிரிவிற்கு ஒதக்கப்பட்ட செலவினத் தலைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட் நிதிக்கமைய தயாரிக்கப்பட்டிருந்த அதேவேளை, அதன் போது முதலாவது இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டுகளுக்கு 25 மாவட்டங்களின் முன் ஆயத்த கருத்திட்டங்களுக்காக நிதி வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் , பயிற்சிப் பிரிவினால் மேுற்கொள்ளப்பட்ட அறிவூட்டல் மற்றும் பயிற்சிகளுக்காக பிரத்தியேகமாக செலவின் தலைப்பு எதுவும் காணப்படாத அதேவேளை, அதற்கான நிதியும் முன் ஆயத்த செலவினத் தலைப்பின் மூலமே வழங்கப்பட்டது. . அதன் போது இன்றளவில் 87,866/- ரூபாய் தொகை செலுத்த வேண்டியுள்ள அதேவேளை, அத் தொகையையும் துரிதமாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்..

2011 ஆம் ஆண்டில் பல்வேறு முன் ஆயத்த செயற்பாடுகளுக்கு முன் ஆயத்த செலவினத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட முழுத் தொகையும் இன்றளவில் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது .

(ஆ) இணங்குகின்றோம்.

᠄∴ 06.∴ யு படிவமானது , அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நிதி செலுத்துகை செயற்பாட்டின் வசதி கருதி அறிமுகப்படுத்தப்பட்ட அதேவேளை , மாவட்டங்களின் உதவிப் பணிப்பாளர்களுக்கு அப்படிவம் மூலம் பணம் செலுத்தப்பட வேண்டுமென முன் கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தது..

இதன் பிரகாரம் இன்றளவில் அனைத்து மாவட்டங்களும் பண செலுத்துகையின் போது பங்கு கொண்டோர்களின் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்துள்ளன. (சகல நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் இப் பங்கு கொண்டோர் பெயர் ஆவணம் உள்ளதென்பதை தயவுடன் தெரவித்துக்கொள்கின்றேன்.) மேலும், முன்

ஆயத்த பிரிவின் அநேகமான நிகழ்ச்சிகள் ஒரு நாள் செயலமர்வாக நடைபெறுகின்ற அதேவேளை, அதற்கான செலவுகள் முறையான பட்டியல்கள் மூலம் மீள் நிரப்பபடும். வருட ஆரம்பத்தில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய முன் ஆயத்த நிகழ்ச்சிகளுக்கான வருடாந்த செயற்பாட்டு திட்டமொன்று மாவட்ட மட்டத்தில் வகுக்கப்படுகின்ற அதேவேளை, அதன் பிரகாரம் , மாதாந்த செயற்பாட்டுத் திட்டமொன்று ஏற்புடைய மாதத்துக்கு முன்னைய மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளப்படும். மேலும் , நிதி வழங்குவதற்கு முன்னதாக மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகளுக்கு மதிப்பீட்டுத் தெகை , நிகழ்ச்சி நடத்தப்படும் இடங்கள், போன்ற தகவல்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் .

எனினும், நிதி ஒதுக்கீடுகள் வழங்குவதில் உள்ள தாமதத்தின் அடிப்படையில் இந் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே திட்டமிட்ட விதத்தில் மேற்கொள்ள முடியாதுள்ளது..

(இ) இணங்க முடியாது .

எல்லா முன் ஆயத்த நிகழ்ச்சிகளும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளாக கருத முடியாத அதேவேளை, ஒத்திகை செயற்பாடுகள் , திட்டங்களை தயாரிக்கும் செயற்பாடுகள், வரை படம் கீறுதல், குழுக்களை இற்றைப்படுத்தல் போன்றவைகளும் அதில் அடங்கும்.. எவ்வாறாறாயினும் இப்படி பல நிகழ்ச்சிகள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவைச் சேர்ந்த அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, அதன் பொருட்டு அவர்களின் அறிவு மற்றும் திறமைகளை மெருகூட்டும் செயற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேற்கொண்டுள்ளது. இவ்வாறானதொரு பின்னணியில் வெளி வளவாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள கூடிய சேவையை பயற்சி பெற்ற அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொண்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. மேலும், அறிவூட்டல் நிகழ்ச்சிகளின் போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வளிமண்டளவியல் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சிகள் அலுவலர்கள் ஆகியோர்களின் பங்கேற்புடன் இந் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

(ஈ) முன் ஆயத்த பிரிவின் மூலம் ஆப்வு பிரவின் நிகழ்ச்சிகளை முன்னெடுக்கும் பொருட்டு மாவட்டங்களுக்கு முன் கூட்டியே காலாண்டு அடிப்படையில் மாதாந்த செயற்பாட்டு திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ள போதிலும் நிதி கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குறிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை உரிய தினத்தில் மேற்கொள்ள முடியாத நிலைமை தோற்றம் பெறலானது. இந்த நிலையில் முற்பணம் செலுத்தும்

நடவடிக்கையும் உரிய முறையில் இடம் பெறாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. எனினும், எதிர்காலத்தில் ஏற்புடைய முற்பண செலுத்துகைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதில் விே'ட கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஓ) மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் 24 மாவட்டங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு இன்றளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய 06 மாவட்டங்களின் திட்டங்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளது. மேற்படி அச்சிடும் நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, எஞ்சிய மாவட்டமான முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

### 4.1.3 வெள்ளப்பெருக்கு அவசர அனர்த்த தொழிற்பாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல்

(அ) இணங்குகின்றோம்.

உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மத்திய நிலையத்தினால் 2012 ஆம் ஆண்டுக்காக 20.5 மில்லியன் ரூபாய் தொகை கோரப்பட்டிருந்த அதேவேளை, 18.65 மில்லியன் ரூபாய் தொகை ஒதுக்கப்பட்டது. . உபகரணங்களின் அடிப்படை தேவைப்பாடு 2012 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய கருத்திட்ட அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி கருத்திட்ட அறிக்கைக்கு அமைவாக நிதி கிடைக்கப் பெறாத காரணத்தினால் கிடைக்கப் பெற்ற நிதியை கொண்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.. அத்துடன் , ஒவ்வொரு தேவைப்பாட்டுக்கு அமைய அந்தந்த மாவட்டங்களுக்கு உபகரணங்களை ஒதுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவ் வருடத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி காரணமாக திட்டமிடப்பட்ட இடங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை விநியோகிக்க முடியாமல் போனது.. அதன் பிரகாரம் ஏற்பட்ட அவசர நிலைமையின் பேரில் மேற்படி இடங்களுக்கு உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன. அச் செயற்பாடு அந்த அளவில் முன்னெடுக்கபடாது போயிருந்தால் பாரிய அளவிலான ஆதன மற்றும் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருந்தது. ஆகவே , முன்னர் திட்டமிடப்பட்டிருந்த இடங்களுக்கு உபகரணங்களை விநியோகிக்க முடியாது போனதென அறிவிக்கப்பட்ட அதேவேளை , எதிர் வரும் காலங்களில் கொள்வனவு செய்யப்படவுள்ள உபகரணங்களை மேற்படி இடங்களுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இணங்குகின்றோம் .

நீர் பவுசரை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 01 மில்லியன் ரூபாய் எஞ்சி இருந்த அதேவேளை, அத் தொகையை பயன்படுத்தி அத்தியாவசிய படகுகள் சிலவற்றை மீண்டும் 50% கொள்வனவு ஏற்பாடுகளின் அடிப்படையில் விலைக்கு வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.. அந்த உபகரணங்களையும் மீண்டுமொரு முறை ஏற்புடைய இடங்களுக்கு அனுப்பிய நிலையில் எம்மால் வழங்கப்பட்ட கொள்வனவு திட்டத்தின் கால எல்லைக்கு மேலதிகமாக மேலும் கால அவகாசம் தேவைப்பட்டது..

(இ) இணங்குகின்றோம்

2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 2076 உயிர் பாதுகாப்பு அங்கிகள், பல்வேறு அளவுகளை கொண்ட (ஏற்புடைய மாவட்டங்களின் தேவைகளின் அடிப்படையில்) மாவட்ட செயலாகங்கள் ஊடாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் முற்பகுதியில் நிலவிய அனர்த்த நிலைமைகளுடன் மாவட்ட அலுவலகங்களுக்கு ஏற்புடைய பொருட்களை துரிதமாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு உரிய அனுமதியின் கீழ் களஞ்சியத்திலிருந்து பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. களஞ்சியப் பொறுப்பாளரால் ஏற்புடைய பொருட்களை விநியோகிக்கும் சந்தர்ப்ங்களில் கையிருப்பு ஏடுகளில் பதியப் படாத காரணத்தினால் பௌதீக ரீதியான ஆய்வின் போது கையிருப்பு ஏடுகளுக்கும் பொருள் கையிருப்புக்கும் இடையே வித்தியாசமொனறை அவதானிக்க முடிநதுள்ளது . களஞ்சியப் பொறுப்பாளரினால் வழங்கப்பட்ட பொருட்கள் மாவட்ட அலுவலகங்களுக்கு கிடைத்ததை உறுதிப் படுத்தும் புசுே அனைத்தும் ஏற்புடைய சந்தர்பத்தில் கிடைக்கப் பெறாதிருந்த காரணத்தினால் கையிருப்பு ஏடுகள் பதியப்படவில்லை என களஞ்சியப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார் . அதன் பிரகாரம் இனி வரும் காலங்களில் ஏற்புடைய நடவடிக்கைகளின் போது களஞ்சியத்திலிருந்து பொருட்களை விநியோகிக்கும் போதே கையிருப்பு ஏடுகளில் குறித்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு களஞ்சியப் பொறுப்பாளர் அறிவுறுத்தப் பட்டுள்ளார். மேலும், எதிர் வரும் காலங்களில் இவ்வாறான குறைப்பாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் கடிந்துரைக்கப்பட்டுள்ளார்.

### 4.1.4 அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற அன்பளிப்புகள்

(அ) இணங்குகின்றோம்.

தற்போது எல்லா அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்தும் பண உதவிகள் கிடைக்கப் பெறும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அது தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. .

(ஆ) பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் நிதி பெறும் போது ஏற்புடைய ஒப்பந்த அடிப்படையிலான சகல பணமும் செலவு செய்யப்படுவது பற்றிய விபரங்கள் அடங்கிய கோப்பொன்றை பேணுவதற்கு நடவடக்கை எடுக்கப்பட்டுள்ளது..

(இ) பல்வேறு அமைப்புகளினால் வழங்கப்பட்ட நிதியை அந்தந்த நிறுவனங்களுடன் எட்டப்பட்ட ஒப்பந்தங்களுக்கு அமைய மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டு செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .

(ஈ) இணங்குகின்றோம்.

இப் புத்தக விநியோக நடவடிக்கைகள் கல்வி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கல்வி அமைச்சினால் ஏற்புடைய புத்தகங்கள் வழங்கப்பட வேண்டிய கல்வி வலய அலுவலகங்கள் தொடர்பான தகவல்களை மத்திய நிலையத்துக்கு வழங்கத் தவறிய காரணத்தினால் அப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியாமல் போனது. கல்வி அமைச்சு இன்றளவில் மேற்படி தகவல்களை வழங்கியுள்ள அதேவேளை , ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள இதர புத்தக தொகுதிகளுடன், இப் குத்தக தொகுதிகளையும் எதிர் வரும் காலங்களில் கல்வி அமைச்சுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது .

(உ) யுனிசெப் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூ .665,889/- தொகையை பயன்படுத்தி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பதவி நிலை மட்டத்திலான 30 அலுவலர்களுக்கு தேசிய திட்டமிடல் செயற்பாட்டில் அனர்த்தங்கள் மூலமான ஆபத்துக்களை குறைப்பது தொடர்பான செயற்பாட்டை மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக இரண்டு நாள் பயிற்சியொன்று வழங்கப்பட்டது .

(ஊ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகளிடமிருந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு கிடைக்கப் பெற்ற பணத்தில் ஏற்புடைய பணி நிறைவு செய்யப்பட்டு எஞ்சிய தொகை அனர்த்த முனாமைத்துவ மத்திய நிலையத்தில் நடாத்தப்பட்ட நிதிக் குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானமொன்றுக்கு அமைய தகவல் தொழ்ல்நுட்ப உபகரணங்கள் கொள்வனவு என்ற பெயரில் கணக்கொன்றை சேமிப்பு பேரேட்டில் திறந்து அதற்கு மாற்றப்பட்டுள்ளது . அதை தொடர்ந்து மேற்படி கணக்கின் மூலம் எமது நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான சில கொள்வனவுகளுக்காக பணம் செலுத்தப்பட்டது . எமது நிறுவனத்துக்கு 2012 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் மூலம் மீண்டு வரும் செலவின நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதுமானதாக அமையாத காரணத்தினால் நிறுவனத்தின் நல் இருப்பு மற்றும் சுபீட்சம் கருதி எம்மால் அவ்வாறு செய்யப்பட்டது .

- தகவல் தொழில்நுட்ப உபகரண கொள்வனவு என்ற சேமிப்பு கணக்கில் ரூ .1,316,454/- தொகை 2012 ஆம் ஆண்டில் புதிய கட்டடமொன்றுக்கு பிரவேசித்தல் மற்றும் புதிய ஆட்சேர்ப்புகளுக்கு தேவையான அலுவலக உபகரணங்கள், தளபாட உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்கள் ஆகியவற்றுக்காக பயன்படுத்தப்பட்டது.. இந் நடவடிக்கைகளுக்காக 2012 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த தொகையான ரூ. 64,000/- போதுமானதாக அமையாத காரணத்தினால் நிறுவனத்தின் பணிகளை வினைத்திறனுடனும் பயன் மிக்கதாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு நிறுவனத்தினால் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன..

- மேலும் , 2012 ஆம் ஆண்டில் நேர்முகப் பரீட்சைக் குழுவிற்கு ஏற்புடையதாக ரூ.399இ022.;.- தொகை செலவிடப்பட்டது. ஏற்புடைய நடவடிக்கைகளை சகல மாவட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மேற்கொள்வதற்கு பெருந் தொகை பணத்தை செலவிட நேர்ந்தாலும், வரவு செலவு திட்டத்தின் மூலம் அதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இதர மீண்டு வரும் செலவின விடயங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் முடிந்திருந்த காரணத்தினால் அச் சந்தர்ப்பத்தில் சேமிப்புத் தொகையில் எஞ்சி இருந்த தொகையை பயன்படுத்தி ஏற்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. .

- இதர மீண்டு வரும் செலவின விடயத்தில் பணம் காணப்படாத சந்தர்ப்பத்தில் ரூ. 30,000/- தொகையொன்று நிறுவனத்தின் சேமிப்பு கணக்கில் எஞ்சியிருந்த தொகையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது . அவ்வாறு அத் தொகையை பயன்படுத்தி எமது நிறுவனத்திற்கு பயிற்சி நிமித்தம் அனுப்பப்பட்டிருந்த பயிற்சி பெறுநர்களுக்கு அமைய சம்பளம் செலுத்தப்பட்டது .

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

(அ) இணங்க முடியாது .

ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்தப்பட்டதற்கான எழுத்துமூல சான்றுகள் எமது நிறுவனத்தில் காணப்படுகின்ற அதேவேளை , அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவும் முடியும்..

(ஆ) சம்பள ஆவணத்தை 2013 ஆம் ஆண்டிலிருந்து உரிய முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) 2013 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து பயணச் செலவுக் கொடுப்பனவுகள் சம்பளத்துடன் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் , அவற்றை வெவ்வேறாக செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது . அத்துடன் பண்டிகை கால முற்பணக் கொடுப்பனவுகளின் போதும் இனி வரும் காலங்களில் அவ்வாறு செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, பண்டிகை கால கொடுப்பனவுகள் ஆவணமொன்றும் பேணப்பட்டு வருகின்றது .

(ஈ) மத்திய நிலையத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு இதர அரச நிறுவனங்களுக்கு அளிக்கப்படுவதற்கு/பதிவு செய்வதற்குள்ள வாகனங்களின் எண்ணிக்கை 04 ஆகும். அவற்றின் தற்போதைய நிலைமை பின்வருமாறு.

| ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனம் | வாகனத்தின் வகை | ஆற்றப்படவுள்ள பணி |
|---|---|---|
| 1. வலல்லாவிட | 01 பக்கோ இயந்திரம் | பதிவு செய்தல் |
| 2. வலல்லாவிட | 01 ட்ரம் ட்ரக் | பதிவு செய்தல' |
| 3. வலல்லாவிட | 01 ட்ரக் | பதிவு செய்தல் |
| 4. பதவிய | 01 நீர் பவுசர் | அளித்தல் |

வலல்ாவிட்ட பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள 03 வாகனங்களின் பதிவு நடவடிக்கைகளுக்கு தேவையான (ஆவுயு 2) உள்ளடங்களாக சகல ஆவணங்களும் மேற்படி நிறுவனத்திற்கு மத்திய நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பதிவை பூர்த்தி செய்வதற்கு தேவையான வாகனத்தின் நிறையை அளவிடும் சான்றிதழ் மற்றும் பதிவுக்க்கு செலுத்தப்பட வேண்டிய பணத்துடன் ஏற்புடைய நிறுவனத்தினால் மோட்டார் வாகன திணைக்களத்திடம் கையளிக்கப்படல் வேண்டும். இவ் வாகனங்களை துரிதமாக பதிவு செய்யப்பட வேண்டியதன் அவசியம் ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது..

பதவிய பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள வாகனத்தை அளிப்பதற்கு தேவையான சகல ஆவணங்களும் தயார் நிலையில் இருக்கின்ற அதேவேளை, இந் நடவடிக்கைகளை 2013 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் நிறைவடைவதற்கு முன்னதாக முடிக்கக் கூடியதாக இருக்கும்.

### 4.3 அடையாளங் காணப்பட்டுள்ள இழப்புகள்

மீளாய்வு ஆண்டினுள் இடம் பெற்றுள்ள 02 விபத்துகள் காரணமாக முழுத் தொகையும் காப்புறுதியில் உள்வாங்கப்படாத காரணத்தினால் பின்வருமாறு ரூ 183,165.71 இழப்பு நிறுவனத்துக்கு ஏற்பட்டது..

| வாகன இல | இழப்புத் தொகை |
|---|---|
| 1. ஸ்ரீ ீடீ 9379 | ரூ . 131,618.83 |
| 2. ஸ்ரீ ீடீ 9337 | ரூ . 51,546.88 |
| கூட்டுத்தொகை | ரூ. 183,165.71 |

மேற்படி இழப்புகளில் ஸ்ரீ ீடீ 9379 என்ற வாகனம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணைக்கு அமைய அச் சந்தர்ப்பத்தில் வாகனத்தை செலுத்திய உதவிப் பணப்பாளரிடமிருந்து (மாவட்ட) அறவிடப் பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ள காரணத்தினால் குறித்த தொகையை இந் நிலையத்திற்கு செலுத்துமாறு ஒழுக்காற்று அதிகாரியான அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது .

இத் தீரமானம் தொடர்பாக ஏற்புடைய அலுவலரினால் செயலாளருக்கு மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை , அது இன்றளவில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இவ் விபத்து காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளதாக மேற்படி ஒழுக்காற்று விசாரணையில் தீர்மாணிக்கப்பட்ட தொகை கிடைக்கப் பெற வேண்டிய தொகையாக கருதி நடைமுறை ஆதனங்களுக்கு சேர்ப்பது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரீ ீடீ 9337 என்ற இலக்க வாகனம் கடமையொன்றின் நிமித்தம் செல்கையில் தனமல்வில , உடவலவ பிரதேசத்தில் விபத்துக்குள்ளான அதேவேளை, விபத்து இடம்பெறும் போது வாகனத்தின் சாரதியாக இம் மத்திய நிலையத்தைச் சேரந்த சாரதியான திரு எஸ்.ஜே.எம் திலகசிறி என்பவர் கடமையாற்றி உள்ளார். அதன் பிரகாரம் இவ் விபத்தானது, சாரதியால் கட்டுப்படுத்த முடியாத விபத்தாக தனமல்வில பொலிஸ் நிலைய தலைமையாக பொலிஸ் பரிசோதகரால் தன்னுடைய 2012.11.16 ஆம் திகதிய கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்ட்டுள்ளது.. இவ் விபத்து தொடர்பாக 104 ஆவது நி.ஒ அமைய விசாரணை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, அதன் பிரகாரம் இவ் இழப்பை மத்திய நிலையத்தின் கணக்கில் சேர்ப்பது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது..

### 4.4 பணியாற்றொகுதி நிருவாகம்

(அ) பதவிநிலை பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதல்

மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் 2012.12.12 ஆம் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டது. இம் மத்திய நிலைத்தின் 03 பணப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பொருட்டு 04 சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரங்கள் மூலம்

பகிரங்கமாக விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் , மிக சொற்ப அளவிலான விண்ணப்பங்களே கிடைக்கப்பெற்றுள்ளன.. அவர்களுள் எவரையும் ஆட்சேர்ப்பு செய்ய முடியாமல் போனதற்கான பிரதான காரணம் அவர்களுக்கு இப் பதவிக்கு தேவையான அடிப்படை தகைமைகள் இல்லாமை மற்றும் சில பேர் அதிக சம்பளம் மற்றும் சலுகைகளை எதிர்பார்ப்பதே ஆகும்..

இதன் பிரகாரம் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போதும் இதே நிலை ஏற்படலாமென மேற்படி அனுபவத்தின் மூலம் எதிர்பார்த்த காரணத்தினால் இரட்டை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவையின் அங்கீகாரம் பெற்பட்ட பின்னர் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் அதற்கு தேவையான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த எவரும் காணப்படாத காரணத்தினால் இதுவரை அப் பதவியை நிரப்ப முடியாதுள்ளது.

மத்திய நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பதவியில் 07 வெற்றிடங்கள் நிலவுகின்ற அதேவேளை, நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய மேற்படி பதவிகள் அனைத்தும் உள்ளக பதவி உயர்வுகள் மூலம் நிரப்ப பட வேண்டியவை ஆகும். இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவையின் கவனத்துக்கு கொண்டு வந்து அவ் அடிப்படையில் 05 வருடங்கள் வரை தற்காலிக இரட்டை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கோரப்பட்டது.. அதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதை அடுத்து மேற் குறிப்பிட்ட மேலதிக பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போதே பிரதி பணப்பாளர் பதவிகளுக்கும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.. மேற்படி விண்ணப்பதாரிகள் மத்தியிலும் மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்தவர்கள் இருக்காத காரணத்தினால் இதுவரை மேற்படி எல்லா பதவிகளும் வெற்றிடமாக உள்ளன

மத்திய நிலையத்தில் மாவட்ட உதவிப் பணப்பாளர்களுக்கு 07 வெற்றிடங்கள் நிலவிய போதிலும், மேற்படி வெற்றிடங்களுக்கு ஆரம்பம் முதலே இலங்கை விமானப் படை மற்றும் தரைப் படையிலிருந்து இணைக்கப்பட்டிருந்த அலுவலர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் .

2011 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று மேன்மை தங்கிய சனாதிபதியும் அனர்த்த முகாமைத்துவ பேரவையின் தவிசாளருமான மஹிந்த ராஜபக்‘ அவர்களின் தலைமையில் இடம் பெற்ற அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமொன்றுக்கமைய இலங்கை விமானப் படை

மற்றும் தரைப் படையிலிருந்து இணைக்கப்பட்ட அலுவலர்களை தொடர்ந்தும் மத்திய நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட காரணத்தினால் மேற்படி 06 உதவிப் பணிப்பாளர்களும் தொடர்ந்தும் மாவட்ட உதவிப் பணிப்பாளர்களாக கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் ஏற்புடைய 06 பதவி வெற்றிடங்களும் தொடர்ந்தும் அப்படியே இருக்கும்.

**(அ) சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறைகளும் நியமனங்களும்**

(i) தாபனக் கோவையின் ஐஐ ஆவது பிரிவின் 10 ஆவது உறுப்புரைக்கமைய மருத்துவ பரிசோதனை அறிக்கைகள், உறுதிமொழிகள் அல்லது சத்திய பிரமாணங்கள் பிரத்தியேக கோப்புகளில் காணப்படாத காரணத்தினால் ஏற்புடைய ஆட்களுக்கு கடிதம் அறிவிக்கப்பட்டுள்ள அதேவேளை, சில அலுவலர்களுக்கு நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பபட்டு அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது..

(ii) பிரத்தியேக கோப்புகளில் இருந்த அநேகமான பத்திரங்கள் அத்தாட்சிப்படுத்தப்படாத போட்டோ பிரதிகளாக இருந்த காரணத்தினால் அது தொடர்பாக ஏற்புடைய அலுவலர்கள்/ஊழியர்கள் எழுத்துமூலமாக அறிவுறுத்தப்பட்டு மீண்டும் சான்றிதழ்களின் முலப் பிரதிகளை தருவித்து அவற்றை நிருவாக அலுவலர் அல்லது உதவிப் பணிப்பாளர் (மனித வளங்கள்) அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு சேகரித்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. ஏற்புடைய சான்றிதழ்களை சமர்ப்பித்திராத ஆட்களுக்கு நினைவூட்டல் கடிதங்கள் மூலமும் அறிவிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன..

(இ) இந்த மத்திய நிலையத்துக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்தே ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டுள்ள அதேவேளை, அப் பதவிகள் எல்லாமே ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. மத்திய நிலையத்துக்கு வாகனங்கள் கிடைக்கத் தொடங்கிய தருணத்திலும் சாரதிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், ஆகவே துரிதமாக சாரதிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டி இருந்த காரணத்தினால் உள்ளக மற்றும் மாவட்ட செயலக அலுவலகங்களில் விளம்பரங்களை பகிரங்கப்படுத்துவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு முறையான விதத்தில் சீரமைப்பு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு ஏட்புடைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன..

## 5. கணக்கீட்டுத் தன்மையும் நல்லாட்சியும்

### 5.1 இணைந்த திட்டம்

2013 □ 2017 ஆம் ஆண்டுகளுக்கான இணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

### 5.2 கொள்வனவுத் திட்டங்கள்

மேற்படி கொள்வனவு செயற்பாட்டின் போது மத்திய நிலையம் எதிர் கொண்ட அவசர நிலைமை மற்றும் மேற்படி 4.1.3 (ஆ) பந்தியின் பதிலில் உள்ளடக்கம் மேற்படி கொள்வனவு திட்டத்தின் காலத்தில் மாற்றம் ஏற்படுவதற்கு செலவாக்கு செலுத்தி உள்ளதென்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்..

## 06. முறைமைகளும் நிருவாகமும்

(அ),(ஆ),(இ),(ஈ) விடயங்கள் மூலம் காட்டப்பட்டுள்ள நிருவாகத் துறைகள் தொடர்பாக வி'ேட கவனம் செலுத்தப்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேஜர் ஜெனரால் காமினி ஹெட்டிஆரச்சி (இளைப்பாறிய)
பணிப்பாளர் நாயகம்
2013.10.